தமிழா! நீ ஓர் இந்துவா?

மஞ்சை வசந்தன்
எம்.ஏ., பி.எட்.,

தமிழா!

நீ ஓர் இந்துவா?

மஞ்சை. வசந்தன் எம்.ஏ., எம்.எட்.,

புரட்சிக்கனல் வெளியீடு

சேத்தியா தோப்பு,

சிதம்பரம் வட்டம் - 608 702

முதற் பதிப்பு : 1983

ஆறாம் பதிப்பு : 2002

விலை: ரூ. 16-00

கீழக்கண்ட முகவரிக்கு M.O. செய்து
இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

சா. பாலகிருஷ்ணன் எம்.ஏ. எம்.எட்.,
சேத்தியா தோப்பு,
சிதம்பரம் வட்டம்-608 702

அச்சிட்டோர் :
சதுர் கிராபிக்ஸ்
சென்னை-24.

முன்னுரை...?

விண்முட்டும் மலையோரம் - நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சு மரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் - முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த தமிழ்மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்,
அறிவுமணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில் கண்டுவிட்டார்!
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள் - தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்!
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர்செய்தார் பிழைகுவித்தார்!
மழையற்றுப்போன வயல்போல மாறிற்று தமிழர் மனம்!

- கலைஞர் மு. கருணாநிதி

குறிப்பு: தரணி போற்ற வாழ்ந்த தமிழன் வாழ்வு தடம் புரண்டு, பாழ்ப்பட்டுப் போன நிலைகுறித்துப் பதறி கலைஞர் வடித்த கண்ணீர் வரிகள் இவை. இவ்வரிகள் இந்நூலுக்கு முன்னுரையா? அல்லது இவ்வரிகளுக்கு இந்நூல் விளக்கவுரையா? உள்ளே படியுங்கள்.

தலைப்புகள்

1. தமிழன் வாழ்ந்தது எப்படி? வணங்கியது எப்படி?	5
2. சிந்து வெளித் தமிழன் வழிபட்டது சிவலிங்கமா?	25
3. பழந்தமிழர் வாழ்வில் பார்ப்பனர்கள் புகுந்தது எப்படி?	33
4. தமிழர்கள் வாழ்வு தடம் புரண்டது எப்படி?	39
5. இந்து மதம் உருவானது எப்படி?	54
6. ஏ தமிழா! நீ ஓர் இந்துவா?	67
7. தமிழன் வாழ்வு தழைப்பது எப்படி?	77

1. தமிழன் வளர்ந்தது எப்படி? வணங்கியது எப்படி?

தமிழன் :

தமிழன் ஒரு தனி இனத்தவன். பிற இனங்களின் கலப்பால் பிறந்தவன் அல்ல. தான் தோன்றிய இடத்திலேயே தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்து வருபவன். தனக்கென்று தனிப்பட்ட பழக்க வழக்கங்களும், கொள்கைகளும் உடையவன்.

ஆரியர் போன்ற அயல் நாட்டினர் இந்தியாவிற்குள் புகுவதற்கு முன்னரே, தென்னிலங்கையின் தெற்கு முனையிலிருந்து வடக்கே இமயமலை வரை பரந்து விரிந்து விளங்கிய நிலப்பகுதி யெங்கும் பரவி வாழ்ந்த பழம்பெரும் இனத்தவன்.

ஆதாரம் :

"There is good ground, then, for supposing that before the Coming of the Indo - Aryans, speakers of the Dravidian languages predominated both in Northern and is Southern India."

(Prof. E. J. Rapson : Cambridge History of India, Vol. I)

அசோகனுடைய இரண்டாவது கற்சாசனமும், பதிமூன்றாவது கற்சாசனமும் தென்னிந்தியாவோடு இலங்கை சேர்ந்தே இருந்தது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன.

ஆனால் அயல்நாட்டாரின் நுழைவிற்குப் பிறகு தமிழன் வாழ்ந்த பரப்பு சுருங்கிக் கொண்டே வந்து, தென்னிந்தியாவோடு நின்று விட்டது. அதாவது இலங்கை முதல் இமயம் வரை வாழ்ந்த தமிழர் அயலவரின் நுழைவிற்குப் பின் தென்னிந்தியப் பகுதியில் மட்டுமே தங்கி வாழ ஆரம்பித்தனர்.

ஆரியர்கள் அயல்நாட்டிலிருந்து கைபர் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்துவிட இந்தியப் பகுதியைத் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டனர். அதனால்தான் வடஇந்தியப் பகுதி ஆரிய நாடு என்று அழைக்கப்பட்டது என வரலாறு கூறுகிறது.

(ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்த காலம் கி.மு. 2000க்கும் 1500க்கும் இடைப்பட்ட காலமாகும்.)

இவ்வாறு இந்தியா முழுவதும் வாழ்ந்த தமிழனின் எல்லை, நாளடைவில் குமரி முனை முதல் வடவேங்கடம் வரை என்று குறுகியது.

தமிழனின் வாழ்விடம்:

தமிழன் முதன் முதலில் வாழத் தொடங்கிய இடம் மலைப் பகுதியாகும். மலைப் பகுதியில் இயற்கையில் விளைந்து கிடந்த காய், கனி, கிழங்கு வகைகளை உண்டான். அவை கிடைக்காத காலத்தில் அப்பகுதியில் வாழ்ந்த விலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை உண்டான். எனவே, முதன்முதலில் தமிழனின் தொழில் வேட்டையாடுதலாகவே இருந்தது.

இந்நிலையில் வாழ்ந்த தமிழனின் இனம் பெருகவே, மலைப்பகுதியில் கிடைத்த உணவு அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அவர்களில் பலர், மலைப் பகுதியை விட்டு, அதன் அருகில் பரவியிருந்த காட்டுப்

பகுதிக்குச் சென்றனர். காட்டுப் பகுதியில் சிறு காடுகள் அழித்து வரகு போன்ற பயிர்களைச் செய்தனர். மனிதனுக்கு தீங்கு செய்யாத ஆடு, மாடு போன்ற விலங்குகளை மலைப்பகுதியிலிருந்து வரும்போதே ஓட்டி வந்து காடுகளில் வளர்த்தனர். வரகரிசிச் சோறும், ஆட்டு இறைச்சியும் அவர்களுக்கு உணவாக அமைந்தன. ஆடு மாடு மேய்த்தலும், பயிரிடுதலும் அவர்களின் தொழிலாக அமைந்தன.

காடுகளை அடைந்த தமிழினம் ஆண்டுக்கு ஆண்டு பெருகவே, அங்கும் அவர்களுக்குப் போதிய உணவு கிடைக்காமையால் - பயிரிட போதிய நிலப்பகுதியின்மையால், அவர்களில் பெரும்பாலோர் அங்கிருந்து இடம் பெயர்ந்து நீர்வளமும், நிலவளமும் உடையப் பகுதிகளில் சென்று தங்கினர். இதற்கு முன் அவர்கள் வாழ்ந்த மலை நிலம் (குறிஞ்சி) காட்டு நிலம் (முல்லை) ஆகியவற்றைவிட இப்பகுதி வளப்பமாகவும், வசதியாகவும் தோன்றியது. காட்டுப்பகுதியில் வாழும் பொழுதே ஓரளவிற்குப் பயிரிடக் கற்றுக்கொண்ட தமிழன், இப்பகுதியில் நிறைந்து நின்ற நீர்வளத்தையும், நிலவளத்தையும் பயன்படுத்தி நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களைப் பயிரிட்டான். நிலத்தின் வளப்பத்திற்கேற்பவே, விளைவும் ஏராளமாய் கிடைத்ததால் அவர்கள் வாழ்வும் வளம் பெற்றது. இதனால் அவர்கள் வாழ்க்கையும் அப்பகுதியிலே நிலைப் பெற்றது. ஆம், அப்பகுதியில் குடியேறிய தமிழர்கள் தலைமுறைத் தலைமுறையாய் அங்கேகே தங்கினர். இப்பகுதியே மருதம் என்று அழைக்கப் பட்டது.

காடு, மலை, நிலங்களிலிருந்து உணவு தேடி இடம் பெயர்ந்த வேறு சிலர் கடல் சார்ந்த பகுதிக்குச் சென்றனர். அங்கு உணவு ஏதும் கிடைக்காமையால், அதைப் பெற முயன்றனர். அவ்வாறு முயன்றவர்களுக்கு அலைகடலில் அளவில்லா மீன்கள் அடங்கியிருப்பது தெரிய வந்தது. உடனே மரக்கட்டைகளின் உதவியால் கடலினுள் சென்று மீன்களைப்

பிடித்துவரப் பழகினர். பிறகு அதையே தங்கள் தொழிலாகவும் கொண்டனர். மீனை உணவாக உண்டனர். உப்புநீர் காய்ந்த இடங்களில் உப்பு விளைந்திருப்பதைக் கண்டு அதை எடுத்தனர். தங்களுக்கு மிஞ்சிய மீனையும், உப்பையும் வேறு பகுதிகளில் (குறிப்பாக மருத நில மக்களிடம்) விற்றனர். இவர்கள் வாழ்ந்த கடல் சார்ந்த நிலப்பகுதி நெய்தல் எனப்பட்டது.

இவ்வாறு, நான்கு நிலப்பகுதிக்கும் சென்று வாழ்ந்த தமிழர்கள், நாளடைவில் நான்கு நிலப்பகுதிகளுக்கும் செல்வதற்குரிய வழித்தடங்களை அமைத்துக் கொண்டு, ஒரு நிலப்பகுதியில் கிடைக்கும் பொருளை இன்னொரு நிலப்பகுதியில் விற்றும், வாங்கியும் ஒருவரோடொருவர் வாணிகத் தொடர்பு கொண்டு வாழத் தலைப்பட்டனர்.

மலைநிலத்து விளைபொருளான வள்ளிக்கிழங்கும், தேனும் விற்றவர்கள், கடல்சார்ந்த நிலப்பொருளான மீன் எண்ணையும், உப்பும் வாங்கினர். மருதநில மக்கள் கரும்பும், அவலும் விற்று, காட்டுநில மக்களிடம் மான் இறைச்சியும் மதுவும் வாங்கினர்.

"தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யோடு நறவு மறுகவும்
தீகு கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மதுமறுகவும்..."

– பொருநர் – 214 – 217

என்ற பாடற் பகுதியே இதற்குப் போதிய சான்றாகும்.

இவ்வாறு வாணிகத் தொடர்பு கொண்ட நான்கு நிலத்துத் தமிழர்களும், நாளடைவில் வாழிடங்களையே வாழ்க்கை வசதிக்கேற்ப மாற்றி அமைத்தனர். மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் என வேறுபட்டிருந்த நிலத்தை (நாட்டை) தம்

உழைப்பால் ஒரே இயல்புடைய நிலமாக முடிந்த அளவிற்கு மாற்றினர். மலைப்பகுதியை மருதமாக்கினர். காட்டை அழித்து கழனியாக்கினர். ஆற்று நீரை அணைகட்டி தேக்கி அப்பகுதி எங்கும் நீர்ப் பாய்ச்சினர்.

"நாடாக ஒன்றோ; காடாக ஒன்றோ;
அவலாக ஒன்றோ; மிசையாக ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்;
அவ்வழி நல்லை; வாழிய நிலனே!"

(புறநானூறு - 187)

என்ற புறநானூற்றுப் பாடல் அக்கால மனிதர்களின் மன உறுதியையும் மேற்கண்ட கருத்தையும் நன்கு விளக்குகிறது.

தமிழர் வாழ்வு:

பண்டைத் தமிழர்களிடையே எவ்விதமான ஏற்றத் தாழ்வும், சாதிப் பாகுபாடும் கிடையாது. செய்யும் தொழிலின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பெயரிட்டு அழைக்கப்பட்டனர். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகளே அவை.

1. அந்தணர்

அரசர், வணிகர், வேளாளர் ஆகிய முத்தரப்பு தமிழ் மக்களில், இல்வாழ்வு நடத்தி, அறிவும் வாழ்க்கை அனுபவமும் பெற்ற சிலர், குடும்பத்தைப் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டு, மக்களுக்குத் தொண்டாற்றும் பொருட்டு வீட்டைவிட்டு வெளியேறி சமுதாயத் தொண்டாற்றியவர்களே அந்தணர்கள் ஆவர்.

இவர்களில் அரச குடும்பங்களில் இருந்து வந்தவர்களும் உண்டு. வணிகப் பிரிவிலிருந்து வந்தவர்களும் உண்டு. வேளாளர் பிரிவிலிருந்து வந்தவர்களும் உண்டு.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே..."

- (தொல்காப்பியம் - கற் - 51)

சுருங்கக் கூறின், அனுபவ அறிவும், பொதுநல நாட்டமும் உடைய, இல்வாழ்க்கையை விட்டுப் பொதுத் தொண்டாற்ற முன் வந்த தமிழ்ப் பெரியவர்களே அந்தணர்கள். இவர்கள் தனிப் பிரிவினர் அல்லர்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்ற வள்ளுவர் குறளும் இதற்குச் சான்று பகரும்.

அந்தணர்கள் ஓரிடத்தில் நிலைத்துத் தங்காமல், ஊர்தோறுஞ் சென்று மக்களுக்கு நல்ல வழிகளை எடுத்துக் கூறி வந்தனர். இவ்வாறு ஊர்தோறும் அலைந்து திரிய வேண்டியிருந்ததால், வெய்யிலுக்குக் குடையும், செருப்பும், நீர் கொண்டு செல்ல செம்பும், ஊன்றுகோலும், படுத்துறங்க பாயும், நல்வழி கூறும் அறநூல்களையும் (புத்தகங்களையும்) தங்களுடைய உடமையாகக் கொண்டிருந்தனர். இதைக் கீழ்க்கண்ட தொல்காப்பிய வரிகள் நன்கு விளக்குகின்றன.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

- தொல்காப்பியம் - மரபி - 70

அரசர் போர் செய்வதற்காக நகரைவிட்டுச் செல்லும் வேளைகளில் அந்தணப் பெரியவர்கள் அரசுப் பணிகளையும் கவனித்து வந்தனர்.

"அந்த ணாளர்க் கரசுவரை வின்றே"

தொல்காப்பியம் - மரபி - 82

2. அரசர்

தமிழ் மக்களுக்குத் தலைமையேற்று அவர்களை ஆண்டவர்களே அரசர்கள் ஆவர். தமிழ்நாட்டில் ஆட்சி முறை ஏற்பட்ட காலத்திலிருந்தே சேர, சோழ, பாண்டிய என்ற அரச மரபினரால் தமிழகம் ஆளப்பட்டு வந்தது. இப்பேரரசுகளுக்கு உட்பட்ட சிற்றரசர்களும் இருந்தனர். பேரரரசர்களால் அமர்த்தப்படும் வணிகரும், வேளாளருமே சிற்றரசர்கள் ஆவர். இதில் வேளாளர்களே அதிகம்.

அரசு என்பதற்கு "காவல்" என்று பொருள். அரசர் என்றால் "காவலர்" என்பதாகும். அதாவது, நாட்டையும் மக்களையும் காக்கின்றவர் என்று பொருள். எனவே, அரசர் என்பது ஒரு சாதியல்ல.

3. வணிகர்

நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு போன்ற தானியங்களையும், அவரை, கடலை, துவரை, கொள்ளு போன்ற பயிறு வகைகளையும் மற்றைய பயனுடைய பொருட்களையும் வணிகம் செய்த தமிழ் மக்களே வாணிகர் எனப்பட்டனர்.

4. வேளாளர்

பயிர்த் தொழில் செய்து அனைத்து மக்களுக்கும் உணவு கிடைக்க வழி செய்த தமிழ் மக்களே வேளாளர் என்றழைக்கப் பட்டனர்.

இவர்கள் அரசர்களுக்கும் பெண் கொடுத்து உறவு கொண்டு வாழ்ந்திருக்கின்றனர்.

இளஞ்சேட் சென்னியின் மனைவி அழுந்தூர் வேளின் மகள் ஆவாள். அவனுடைய மகன் கரிகாலனின் மனைவி நாங்கூர் வேளின் மகள். சேரன் செங்குட்டுவனின் மனைவி கொங்குவேள் ஒருவனின் மகள்.

எனவே, அந்தணர் என்பதும், அரசர் என்பதும், வணிகர் என்பதும், வேளாளர் என்பதும் தொழில் பிரிவுகளே! சாதிப்பிரிவுகள் அல்ல என்பதற்கு மேற்கண்ட திருமண உறவுகளே நல்ல சான்றுகளாகும். சாதிப் பிரிவுகளாக இருந்திருந்தால் திருமண உறவு ஏற்பட்டிருக்காது அல்லவா?

தமிழ் காதல்:

உலகிலே உண்மையான காதல் வாழ்வு நீண்ட நேரம் நெடுங்காலம் நிலவியது தமிழர்களிடையேதான். காதலின் உண்மைப் பொருள் உணர்ந்து உன்னத காதல் வாழ்வு வாழ்ந்தனர் தமிழர்.

பருவமடைந்த ஒரு ஆணும் பெண்ணும் தனியே சந்தித்துப்பேசி, காதல் கொள்வது என்பது அன்று குற்றமாகக் கொள்ளப்படவில்லை. காதல் என்பது வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே கருதப்பட்டது.

ஏற்ற பருவமுடைய ஆணும் பெண்ணும் தனக்கேற்ற துணையைத் தானே தேர்ந்தெடுத்து, அதன்பின் மாறா அன்போடு இல்வாழ்வு நடத்துவதே பண்டைத் தமிழனின் வழக்கம்.

பண்டைத் தமிழர்களின் காதல் காட்சியைத் தொல்காப்பியம் தெள்ளத் தெளிவாய்க் காட்டுகிறது.

***இயற்கைப் புணர்ச்சி*:**

ஆணும் பெண்ணும் முதன் முதலில் ஒருவரையொருவர் சந்தித்துக் காதல் கொள்ளுதல் இயற்கைப் புணர்ச்சி எனப்படும். இந்த இயற்கைப் புணர்ச்சியை நான்கு நிலைகளில் தொல்காப்பியர் தெளிவாக விளக்குகிறார்.

காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்பவையே அவை.

1. காட்சி:

பருவத் துடிப்புள்ள ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் முதன் முதலில் காணுதலே காட்சி எனப்படும்.

"ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"
(தொல் - களவு - 2)

(கிழவன் - தலைவன், கிழத்தி - தலைவி)

2. ஐயம்:

தான் கண்ட பெண் எவ்விடத்தைச் சேர்ந்தவளோ, யார் மகளோ, நம்மை இவள் காதலிக்கிறாளோ இல்லையோ என்று தலைவன் சந்தேகத்துடன் தவிப்பான். இதுவே ஐயம் எனப்படும். இதே சந்தேகம் பெண்ணுக்கும் எழும்.

3. தெளிவு:

அவனது காதல் பார்வையைக் கண்ட அவள் கண்களிலும் அக்குறிப்புத் தோன்றினால், அவள் தன்னை விரும்புகிறாள் என்பதைக் கணநேரத்தில் அவன் புரிந்து கொள்வான். அவன் பார்க்கின்ற பார்வையே அவன் இவளை விரும்புகிறான் என்பதை அவளுக்கு அறிவித்துவிடும்.

அவனது காதல் பார்வையால் அவளுக்குக் காதல் தோன்றினாலும், முதல் சந்திப்பு என்பதால் அவளது உடலில் மெல்ல நடுக்கம் தோன்றும். நாணத்தோடு அடிக்கடி அவனை நோக்குவதும், நிலத்தை நோக்குவதுமாக மாறி மாறிக் குறிப்புகள் காட்டுவாள்.

இவற்றைக் கண்ட அவன் தன்னைக் காதலிக்கிறாள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வான்.

இவ்வாறு இருவரும் ஒருவரையொருவர் விரும்புவதைத் தெளிவாகப் புரிந்துகொள்வர். இதுவே தெளிவு எனப்படும்.

4. தேறல்:

இவ்வாறு தெளிவடைந்த தலைவன், தலைவிக்குத் தன் காதலை வலியுறுத்த தன் கண்களால் காதல் குறிப்புகாட்டுவான். அது போலவே அவளும் தன் காதலை உறுதிப்படுத்த கண்களால் காட்டுவாள் அல்லது வேறு உடலசைவுகளைச் செய்வாள். இவ்வகையில் தங்கள் காதலை இருவரும் உறுதி செய்து கொள்வதே தேறல் எனப்படும்.

மேற்கண்ட இக்காட்சிகளை,

"புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல், சிதைவு பிறர்க் கின்மை"

என்ற வரிகளால் தொல்காப்பியர் தெளிவாகக் காட்டுகிறார்.

இவ்வாறு அவளுடைய சம்மதம் அறிந்த அவன், மெல்ல அவளை நெருங்கி அவளது கூந்தலில் சூடியுள்ள பூக்களில் மொய்க்கும் வண்டுகளை ஓட்டுவது போல் பாவனை செய்து, அவள் தோளைத் தொடுவான். அவ்வாறு அவன் தோளைத் தொடுவதை அவள் ஏற்றுக் கொள்வாளாயின், அடுத்து அவளது கூந்தலை நீவி விடுவான்; நெற்றியிலும் மெல்ல விரல்களால் தடவுவான்.

அவனது இச்செய்கையால் அவளது உடல் முழுவதும் பல்வேறு உணர்வுகள் தோன்றும். உடல் நெளியும், உடை தளரும், உணர்வு வளரும். இடுப்பைவிட்டு நழுவுகின்ற ஆடையை இழுத்து இழுத்துப் பிடித்துச் சரி செய்வாள். அவ்வாறு சரிசெய்து கொண்டே அவனையும் கடைக்கண்ணால் பார்ப்பாள்.

அவளது பார்வையில் மயங்கிய அவன் உணர்வுப் பெருக்கெடுத்து நிற்பான். அவனது நிலைகண்ட அவள் வெட்கந் தாளாமல் கண்களைக் கையால் மூடிக்கொண்டு ஓடி அருகிலுள்ள செடியில் மறைந்து கொள்வாள்.

அவனும், அவளைத் தொடர்ந்து செல்வான். பின் அவள் வெட்கம் நீங்கி அவனது காதலுக்கு இசைவாள். இருவரும் உளம் ஒத்தக் காதலர் ஆவர்.

பின், "இனி உன்னை என்றும் பிரியேன்" என்று அவன் அவளுக்கு உறுதி கூறிப் பிரிந்து செல்வான்.

அன்று போலவே மறுநாளும் அவன் அங்கு சென்று அவளைச் சந்திப்பான். முதல் நாள் போலவே அவள் உடல் தடவி தன் காதலை உறுதிப்படுத்துவான். முதல் நாளைவிட மறுநாள் அவள் எளிதில் நாணம் நீங்குவாள். அன்றைய சந்திப்பின் முடிவில்,

"நான் பக்கத்தில்தானே உள்ளேன்; எனவே நீ கலங்காதே; உன்னை என்றும் பிரியேன்..." என்று மீண்டும் உறுதி கூறி, அவள் தலையில் பூச்சூடி பிரிவான்.

பருவமடைந்த ஆண்களும் பெண்களும் தங்களுக்கு விருப்பமுடையவர்களைத் தடையின்றிக் காதலித்தனர். சாதி போன்ற தடைகள் இல்லை. சாதியும் அன்று இல்லை.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும்எம் முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

(குறுந்தொகை - 40)

என்று ஒரு காதலன் தன் காதலியிடம் கூறியதைக் குறுந்தொகை விளக்குகிறது.

அதாவது, என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் எவ்வகையில் தொடர்புடையர்? உன்னுடைய தந்தையும் என்னுடைய தந்தையும் எவ்வகையில் உறவு உடையவர்கள்? ஒருவகையிலும் இல்லையே! என்னை நீயும் உன்னை நானும்

இதற்குமுன் அறிந்தோம் இல்லை. என்றாலும் நம்முடைய அன்புடைய நெஞ்சங்கள், நிலத்தில் நீர் கலப்பது போல ஒன்றாகக் கலந்துவிட்டதைப் பார்த்தாயா? என்று காதலியிடம் காதலன் கூறியதை இப்பாடல் கூறுகிறது.

எனவே, அக்கால தமிழ்க் காதலுக்குச் சாதியில்லை. உறவு இல்லை. (உறவுக்காரர்கள்தான் மணந்து கொள்ள வேண்டும் என்பது இல்லை) ஏற்றத் தாழ்வு இல்லை. அன்பு கொண்ட, பருவமடைந்த எந்த ஆணும் பெண்ணும் காதல் கொண்டனர்; இல்வாழ்வு நடத்தினர்.

தமிழர் திருமணம்:

காதல் கொண்ட இருவரும் இறுதியில் இல்வாழ்க்கையை எந்தவித திருமணச் சடங்கும் இன்றி துவங்குவதே பண்டைத் தமிழரின் மரபாக இருந்தது. அதாவது, காதலர்கள் திருமண நிகழ்ச்சி ஏதுமின்றிப் பெற்றோர்கள் சம்மதத்துடன் தங்கள் இல்வாழ்வைத் தொடங்கினார்கள்.

பெற்றோர் சம்மதிக்காவிட்டாலும், காதலியின் விருப்பத்தோடு அவளை ஒருவரும் அறியாமல் தன் ஊருக்கு அழைத்துச் சென்று இல்வாழ்வு நடத்துவான்.

இவ்வாறு இல்வாழ்வு நடத்திக் கொண்டிருந்த தமிழர்களிடையே அவசியம் கருதி திருமண முறை ஏற்படுத்தப்பட்டது.

தன் துணையைத் தானே தேர்ந்தெடுத்து எவ்வித திருமண நிகழ்ச்சியும் இன்றி இல்வாழ்வு தொடங்கி வந்த தமிழர்களிடையே சில தவறுகள் தோன்ற ஆரம்பித்தன.

காதல் கொண்டு பழகியபின், அக்காதல் வெளிப்படும் போது, சில ஆண்கள், "நான் இவளைக் காதலிக்கவில்லை" என்று பொய்கூற ஆரம்பித்தனர். சில நாள் வாழ்ந்த பின் பெண்களைக் கைவிடும் வழக்கத்தைச் சிலர் மேற்கொண்டனர்.

இதைக் கண்ட பெரியவர்கள், இப்படிப்பட்ட மோசடிகள் நடக்காமல் தடுக்கும் பொருட்டு பலரறிய திருமணம் செய்யும் முறையை ஏற்படுத்தினர். அதாவது, காதலிக்கிறார்கள் என்பது தெரிந்ததும், பெற்றோர்கள் சம்மதத்துடன் பலரறிய அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் முறையை தமிழ்ச் சான்றோர்கள் ஏற்படுத்தினர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

(தொல்காப்பியம் - கற் - 4)

என்ற தொல்காப்பிய வரிகள் இதற்குச் சான்றாக அமைகின்றன. பலரறிய திருமணம் செய்து கொண்டவர்கள் பொய் கூற இயலாது; பெண்கள் கைவிடப்பட மாட்டார்கள் என்ற எண்ணத்திலே தமிழ்ப் பெரியோர்கள் (ஐயர்) திருமண முறையை கரணம் ஏற்படுத்தினர். ஐயர் என்பது தமிழ்ப் பெரியவர்களையே குறிக்கிறது. (ஐயர் என்றால் தலைவர் என்று மட்டுமே பொருள். பின்னாளில் ஆரியர்கள் தங்களைக் குறிக்கும் சொல்லாக ஆக்கிக் கொண்டனர்.)

ஆனால் தமிழர்கள் ஏற்படுத்திய திருமண முறையில் எவ்விதச் சடங்கும் கிடையாது. எரி வளர்த்தல், பார்ப்பனர் வேதம் ஓதல் போன்றவை இல்லை.

பின் எப்படி நடந்தது?

கீழே படியுங்கள்!

மணம் நடத்தப் பெறும் இல்லத்தின் முன்னே தென்னங்கீற்றலான பந்தல் போடப்படும். மணப் பந்தலைச் சுற்றிலும் பல்வேறு வகையான மலர் மாலைகள் தொங்கவிடப்படும். மணி மாலைகளையும் ஆங்காங்கே தொங்கவிடுவார்கள்.

பருப்பைச் சேர்த்துச் சமைக்கப்பட்ட பொங்கலை விருந்தினர்கள் உண்ண அளிப்பார்கள்.

புதுமணல் பரப்பப்பட்ட இடத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும். அதுவே மணமேடை.

அதிகாலையில் இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பெண்கள் சிலர் ஆற்றுக்குச் சென்று ஆற்றுநீரை குடங்களில் நிரப்பிக் கொண்டு வந்து மணப்பந்தலின் முன்னே வைப்பர். அக்குடத்தில் உள்ள நீரை நான்கு பெண்கள் எடுத்து மணப்பெண்ணிற்கு நீராட்டுவர்.

அவ்வாறு நீராட்டுகையில், "கற்பொழுக்கத்தில் கொஞ்சமும் பிறழாமல், பதினாறு பேறுகளையும் பெற்று உன் கணவன் மகிழும்படி நாளும் நடப்பாயாக!" என்று அனைவரும் வாழ்த்துவர். அதன்பின் அவளுக்குப் புத்தாடை அணிவித்து மணற்பரப்பில் அமர்த்துவர். பின் அனைவரும் வாழ்த்துக் கூறி மணமகனிடம் அவளை ஒப்படைப்பர்.

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்க நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தார் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வயற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிமை மகளிர் நால்வர் கூடிக்

கற்பினின் வழாஅ நல்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி.
பல்லிடுங் கதுப்பின் நெல்லோடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுந்து
பேரிற் கிழித்து யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்."

(அகநானூறு - மருதம் - 86)

1600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நல்லாவூர் கிழாரால் பாடப்பெற்ற இப்பாடல் பண்டைத் தமிழர்களின் திருமண முறையைப் பறைசாற்றுகிறது.

இன்னும் ஆதாரம் வேண்டுவோர் கவிஞர் விற்றூற்று மூதெயின்னார் எழுதிய பாடலைப் பார்க்கவும். (அகநானூறு -மருதம் - 136)

மேற்கண்ட திருமண முறையை ஆராய்ந்து பார்க்கும் போது பண்டைத் தமிழர்கள் திருமணத்தில், தாலி இல்லை. வரம் கெட்ட வேதம் இல்லை. எரிவளர்த்தல் இல்லை, ஏய்த்துப் பிழைக்கும் புரோகிதம் இல்லை, அம்மி மிதித்தல் இல்லை, அருந்ததி பார்த்தல் இல்லை என்பது தெளிவாக விளங்குகிறது.

தமிழர் வழிபாடு:

பண்டைத் தமிழர்களிடையே இருந்தது முழுவதும் நன்றி உணர்வும் மரியாதை உணர்வுமேயாகும். தனக்கு பயனளிக்கக் கூடியவற்றிற்கு நன்றி செலுத்தினான். தன்னினும் உயர்ந்தவர்களுக்கு மரியாதை செலுத்தினான்.

இந்த நன்றியும் மரியாதையுமே நாளடைவில் வழிபாடாக மாறியது. வழிபாடாக மாறினாலும், நன்றிக்கு உரிய

பொருட்களையும், மரியாதைக்கு உரியவர்களையும் மட்டுமே வழிபட்டனர். மாறாக கடவுள் எதையும் வழிபடவில்லை.

வழிப்பயணம் மேற்கொள்ளுகின்ற தலைவனும் தலைவியும் அச்சமின்றி செல்லும் வகையில் இரவில் நன்றாக வெளிச்சம் தரவேண்டும் என்று பெற்ற தாய் நிலவை வேண்டியிருக்கிறாள்.

(தொல்காப்பியம் - அக - 36)

தலைவன் வருத்தமில்லாமல் வழிப்பயணம் வர வெய்யில் அதிகமாக இருக்கக் கூடாது என்று தலைவி சூரியனை வேண்டியிருக்கிறாள்.

(தொல்காப்பியம் - மெய் - 24)

பாம்பு தங்களைக் கடிக்காமல் இருக்க வேண்டும் என்று மக்கள் பாம்பை வணங்கியிருக்கின்றனர்.

நாட்டைப் பகைவர் கைப்பற்றாமல் தடுக்க வீரத்துடன் போரிட்டு உயிர்விட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு செய்தனர்.

(தொல்காப்பியம் -புறத் - 55)

பத்தினிப் பெண்களுக்கு நினைவுக்கல் எடுத்து வணங்கினர்.

இல்லுறை தெய்வ வழிபாடு:

இறந்து போன குடும்பப் பெரியவர்களை (பெற்றோர்களை) வழிபாடு செய்வதே இல்லுறை தெய்வ வழிபாடு ஆகும்.

இறந்து போன குலப் பெரியோர்கள் வழிபடும் வழக்கம் தமிழர்களிடையே இருந்தது.

திருமணம் போன்ற நிகழ்ச்சிகளின் போது, புது ஆடைகளை நடுவீட்டில் வைத்துப் பெற்றோர்களை வழிபட்ட பின் அவற்றை உடுத்திக் கொண்டனர். திருமணத்தின்போது மணமக்களின் புது ஆடைகளை நடுவீட்டில் வைத்துப் படைக்கும் வழக்கம் இக்காலத்திலும் வழக்கத்தில் உள்ளது. இதை வீட்டுத் தெய்வத்திற்குப் படைத்தல் என்கிறார்கள். சேத்தியா தோப்பிற்கு அருகில் உள்ள பேரூர் என்ற ஊரில் இவ்வாறு மணமக்களின் ஆடைகள் வீட்டுத் தெய்வத்திற்குப் படைக்கப்பட்டதை நானே பார்த்திருக்கிறேன்.

இறந்தவர்களுக்கு இறுதிக்கடன் செய்யும்போது, இறந்தவர் ஆணாக இருந்தால் புதுவேட்டியும், பெண்ணாக இருந்தால் புதுப்புடவையும் எடுத்து வந்து நடுவீட்டில் வைத்து வழிபாடு செய்தனர்.

மேற்கண்ட விளக்கங்களும், ஆதாரங்களும் இல்லுறை தெய்வ வழிபாடு என்பது குலப்பெரியோர் வழிபாடே யாகும் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இல்லுறை தெய்வம் என்பதற்கு குலதெய்வம் என்று பொருள். குலதெய்வம் என்பதற்கு குல முன்னோராகிய தெய்வம் என்று பொருள். அதாவது இறந்து போன அப்பன், பாட்டி போன்றவர்களை இது குறிக்கும்.

இக்காலத்தில்கூட, ஒவ்வொரு குடும்பத்தைச் சார்ந்தவர்களும் தங்களுக்கென்று ஒரு குல தெய்வத்தை வழிபடுவதைக் காணலாம். அவர்கள் பரம்பரையில் மிகவும் சிறப்புடன் வாழ்ந்து இறந்தவரே அவ்வாறு குலதெய்வமாக வழிபடப்படுகிறார். குலதெய்வங்களாக வழிபடப்படுபவை பொதுக் கடவுள்களாக (முருகன், சிவன், விஷ்ணு, வினாயகர் போன்றவையாக) இல்லாமலிருப்பதே குலதெய்வங்கள் எனப்படுபவை, குலப்பெரியோர்களே என்பது தெளிவாகிறது.

தலைவர்களை வணங்கல்:

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களிலும் வாழ்ந்த தமிழர்கள், தங்கள் நிலத்தின் தலைவர்களையும் வழிபட்டு வாழ்ந்தனர்.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல் பொருள் அகத் - 5)

என்ற தொல்காப்பிய வரிகள் மேற்கண்ட கருத்தை மிகவும் தெளிவாக விளக்குகின்றன.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நிலத்து மக்கள் முறையே மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய நிலத் தலைவர்களையே வணங்கினர்.

மாயோன் என்றால் திருமால் என்றும், சேயோன் என்றால் முருகன் என்றும், வேந்தன் என்றால் இந்திரன் என்றும், வருணன் என்றால் கடல் கடவுள் என்றும் பல உரையாசிரியர்கள் இதற்குப் பொருள் கூறுகின்றனர். இக்கருத்து முற்றிலும் தவறானதாகும்.

தங்கள் கருத்துக்களை வலியுறுத்திக் கூற தமிழர் வழக்கத்தையே திரித்துக் கூறுகின்ற பெருங்குற்றத்தை அவர்கள் செய்துள்ளனர்.

மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்பதற்குத் திருமால், முருகன், இந்திரன், கடற் கடவுள் என்று அர்த்தங்கூற

எந்த ஆதாரமும் இல்லை. அக்காலத்தில் இக்கடவுள்கள் உண்டாக்கப்படவும் இல்லை. இவையெல்லாம் பிற்கால மனிதன் உருவாக்கியவை ஆகும்.

வயலும் வயலைச் சார்ந்த பகுதியும் மருதம், மருத நிலத் தலைவன் வேந்தன்.

மலைநிலத்துத் தலைவன் சேயோன்.

காட்டு நிலத்துத் தலைவன் மாயோன்.

கடல் சார்ந்த நிலத்துத் தலைவன் வருணன்.

இக்கருத்தே உண்மையானதாகும். இதற்குக் கீழ்க்கண்ட வரிகளே தகுந்த ஆதாரமாகும்.

"*மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்*

தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" (புற - 5)

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

"முல்லை நிலத்துத் தலைவன் மாயோன் அம் மக்களை காத்தது போல், ஒருவன் மக்களே மிகச் சிறப்புடன் காத்துப் பெற்ற நீங்காத புகழைக் கூறல் பூவைநிலை ஆகும்" என்பது இப்பாடலின் கருத்து.

எனவே,சேயோன், வேந்தன், வருணன் ஆகிய மூவரும் அந்த அந்த நிலத் தலைவர்களே என்பதும் இதன் மூலம் உறுதியாகிறது.

மேலும், கடவுளாக இவர்கள் இருந்தால் எல்லோரும் வழி பட்டிருப்பார்கள். அந்தந்த நிலத்து மக்கள் மட்டுமே வழிபட்டிருக்க மாட்டார்கள். நிலத் தலைவன் என்பதாலே அந்தந்த நிலத்துடன் மக்கள் அந்தந்த தலைவர்களை வழிபட்டார்கள்.

'கருப்பொருள்களிலொன்றான தெய்வத்தைக் கருப் பொருள் கூறுமிடத்துக் (அகத் - 18) கூறாது, நிலமுதற் பொருளோடு கூறியிருத்தல் (அகத் - 5) மாயோன் முதலிய நால்வரும் - முல்லை முதலிய நானிலங்களையும் ஆண்ட தலைவர்கள் என்பதை அறிவுறுத்தவேயாம். அச்சூத்திரத்தில் உள்ள 'மேய' என்னுஞ் சொல்லும் இதனை நன்கு 'வலியுறுத்தும்' என்று தமிழ்ச் சான்றோர் புலவர் குழந்தை அவர்கள் அரிய ஆராய்ச்சிக்குப் பின் கூறுகிறார்.

எனவே, பலன் தருபவற்றை வணங்குவதும், மறைந்த குடும்பப் பெரியோர்களையும், உயர்ந்தவர்களையும் வழிபடுவதுமே பழந்தமிழரிடையே நிலவிய வழிபாடாகும்.

அப்படியென்றால், சிந்துவெளிப் பகுதியைத் தோண்டி ஆராய்ந்தபோது சிவலிங்கம் கிடைத்ததே, அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்கள்தானே! எனவே, ஆரியர் வருகைக்கு முன்பே தமிழன் சிவலிங்கத்தை வழிபட்டிருக்கிறான் என்றுதானே அர்த்தம் என்று சிலர் கேட்கக் கூடும்.

சிலர் இவ்வாறு கேட்டும் இருக்கிறார்கள். ஏடுகளில் எழுதியும் இருக்கிறார்கள். எனவே, சிந்துவெளி மக்கள் வழிபட்டது சிவலிங்கமா? என்பதை இனி ஆராய்வோம்.

2. சிந்துவெளித் தமிழன் வழிபட்டது சிவலிங்கமா?

வட இந்தியாவில் சிந்துநதி பாய்கின்ற பகுதியில் 'மொஹஞ்சதாரோ' என்னும் இடத்திலும், 'ஹரப்பா' என்னும் இடத்திலும் பூமியைத் தோண்டி ஆராய்ந்தபோது, அப்பகுதியில், சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் (தமிழர்கள்) மிகவும் சிறப்புடன் வாழ்ந்தனர் என்பது தெளிவாகத் தெரிய வந்தது. அங்கு பூமியைத் தோண்டியபோது தமிழர்கள் பயன்படுத்திய பல பொருட்கள் கிடைத்தன. குறிப்பாக லிங்க வடிவமுள்ள சில கற்சிலைகளும் கிடைத்தன.

அங்கு கிடைத்த உருவம் கோயில்களில் காணப்படுகின்ற சிவலிங்கத்தைப் போன்ற அமைப்பில் இருப்பதால் வரலாற்று அறிஞர்கள் அதையும் சிவலிங்கமாகவே எண்ணுகின்றனர். அது மட்டுமின்றி, அவ்வளவு பழங்காலத்திலே, ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னமே சிந்துவெளிப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் சிவலிங்கத்தை வழிபட்டிருக்கிறார்கள் என்றும் கூறுகின்றனர்.

ஆனால், ஆழ்ந்து ஆராய்ந்தால் இது உண்மை அல்ல. பின் எது உண்மை?

சிந்துவெளி மக்கள் சிவலிங்கம் போன்ற அமைப்புடைய அந்த உருவத்தை வழிபட்டார்கள் என்பது உண்மை. ஆனால் அதை சிவலிங்கமாக எண்ணி வழிபடவில்லை.

பின் எப்படி வழிபட்டார்கள்?

அக்கால தமிழர்களிடையே எந்தவிதமான கடவுள் நம்பிக்கையும் கிடையாது. தமிழர்களிடம் மட்டுமல்ல உலகில் எப்பகுதியிலும் அக்கால மக்களிடம் கடவுள் நம்பிக்கை இல்லை.

அக்கால மக்கள் பயம் தந்தவற்றை வணங்கினர். பயன் தந்தவற்றை வழிபட்டனர்.

வணக்கம் வழிபாட்டிலிருந்து வேறுபட்டது. வணங்குதல் என்பதற்கு உடன்படுதல் அல்லது அடங்குதல் என்று பொருள். வணக்கம் என்பதற்கு இணக்கம் என்ற அர்த்தமும் உண்டு.

ஒருவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றவர்களைப் பார்த்து மிகவும் வணக்கமானவர் என்று நாம் கூறுவதே இதற்குச் சான்றாகும். தலைவாரிக் கொள்ளும்போது, தலை மயிர் சரியாகப் படியவில்லை யென்றால் அவர்கள் முடியை வணங்காமுடி என்று அழைப்பதுண்டு.

வலிமையான ஒருவன் தாக்க வரும்போது, வலிமை குறைந்தவன் அவனுக்கு வணங்குகிறான். அதாவது வலிமை உடையவன் விருப்பத்திற்கு இவன் கீழ்ப்படிகிறான் என்பதே அதற்குப் பொருள். அதனால்தான் தனக்கு வணங்குகிறவனை யாரும் ஒன்றும் செய்வதில்லை.

இந்த அடிப்படையிலே அக்கால மக்கள் அச்சந் தரக் கூடியவைகளைக் கண்டு வணங்கினர். அவ்வாறு வணங்கினால் அவை தம்மைத் தாக்காது என்று நம்பினர்.

எனவே, பாம்பு, கொடிய விலங்குகள், புயல், தீ, வெள்ளம் இவற்றை வணங்கினர். இக்காலத்தில்கூட பாம்பை வணங்கு கின்றனர். நல்ல பாம்பைக் கண்டால் வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கினால் அது கடிக்காமல் சென்றுவிடும். அதை அடிக்கக் கூடாது என்று நம்புகின்றனர்.

வெள்ளப் பெருக்கெடுத்து வரும்போது இக்காலத்திலும் சிலர் வணங்குகின்றனர். ஏனென்று கேட்டால், "வெள்ளத்தை வணங்கினால் அது சீக்கிரம் வடிந்துவிடும்'' என்று கூறுகின்றனர்.

இந்த விஞ்ஞான உலகத்திலே இப்படிப்பட்ட நம்பிக்கை இருக்கும்போது, அக்கால மக்களிடம் இந்த நம்பிக்கை இருந்ததில் வியப்பொன்றும் இல்லை.

வழிபாடு என்பது, நன்றியின் பயனாகவோ அல்லது மரியாதையின் விளைவாகவோ செய்யப்படுகிறது.

தனக்குப் பயன்படக் கூடியதற்கும், தன்னால் மதிக்கப்படக் கூடியவற்றிற்கும் வழிபாடு செய்வது மக்களிடையே நீண்ட நெடுங்காலமாகக் காணப்படுகிற ஒரு வழக்கமாகும்.

பொங்கல் விழாவின்போது மாரி (மழை), சூரியன், மாடு இவை மூன்றுக்கும் வழிபாடு செய்வதைக் கொண்டே இவ்வுண்மையை உணரலாம். பயிர் செய்யப் பயன்படும் இந்த மூன்றுக்கும் நன்றி செலுத்தவே இந்த வழிபாடு.

இதேபோல் மரியாதைக்கு உரியவர்களையும் வழிபடுவது மக்களுடைய வழக்கமாக இருக்கிறது. அரசனை வழிபடல், பத்தினிப் பெண்டிரை வழிபடல், ஆசிரியரை வழிபடல், பெற்றோர்களை வழிபடல் போன்றவை இதற்குப் போதுமான சான்றுகளாகும்.

இந்த அடிப்படையில்தான் அக்கால மக்கள் பயம் தந்தவற்றிற்குப் பணிந்தனர். (வணங்கினர்) பயன் தந்தவற்றிற்கு வழிபாடு செய்தனர்.

இந்த வழக்கமே சிந்துவெளியில் வாழ்ந்த பழந்தமிழர்களிடமும் இருந்ததே தவிர, மற்றப்படி கடவுள் நம்பிக்கை எதுவும் இல்லை; அவர்கள் காலத்தில் சிவன்,

விஷ்ணு, விநாயகர், ஆறுமுகம் போன்ற கற்பனைக் கடவுள்கள் உருவாக்கப்படவும் இல்லை.

அப்படியென்றால் சிந்து சமவெளியில் கிடைத்த சிவலிங்கத்தைப் போன்ற அமைப்புடைய உருவம்தான் என்ன? அதை ஏன் வணங்கினர்?

விளக்கம் இதோ:

சிந்துவெளியில் கிடைத்த சிவலிங்கத்தைப் போன்ற உருவம் ஆண் உறுப்பும், பெண் உறுப்பும் இணைந்த நிலையே ஆகும்.

ஆண் உறுப்பையும் பெண் உறுப்பையும் ஒன்றாகப் பொருந்தியே அக்கால மக்கள் வழிபட்டனர்.

இந்த ஆபாச உறுப்புக்களை ஏன் வழிபட்டனர்? இன்றைக்கு ஆபாசமாக நினைக்கப்படும் உறுப்புக்கள் அன்றைக்கு அவசியமானவைகளாகக் (அடிப்படை) கருதப்பட்டன.

அக்காலத்தில் மக்களைவிட விலங்குகளே அதிக அளவில் இருந்தன. மனிதர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

எனவே, அக்கால மக்களுக்குத் தங்கள் இனத்தைப் பெருக்கம் அடையச் செய்ய வேண்டிய அவசியம் அதிக அளவில் இருந்தது. மக்கள் எண்ணிக்கை அதிகம் பெருக வேண்டும் என்று அக்கால மக்கள் விரும்பினர்.

பிள்ளைகளைப் பெற்றெடுத்துத் தரக்கூடிய பெண்களை மிகவும் மதித்து நடந்தனர். பெண்களுக்கே சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து இருந்தது. இதன் காரணமாகப் பெண்களையே வழிபட்டிருக்கின்றனர். அவர்கள் வழிபட்ட பெண்ணுருவச் சிலைகளும் சிந்துவெளிப் பகுதியில் கிடைத்துள்ளன.

இவ்வாறு தங்கள் இனம் அதிகம் பெருக்கமடைய வேண்டும் என்பதில் அதிக ஆவல் கொண்ட அக்கால மக்கள், அந்த இனப்பெருக்கத்திற்கு அடிப்படையாக, அவசியமாக இருக்கக்கூடிய ஆண் உறுப்பையும், பெண் உறுப்பையும் மிகவும் மரியாதையுடனும், நன்றியுடனும் பார்த்தனர்.

மேலும் அன்றைய உலகில் மனிதர்களுக்கு இன்பம் தரக் கூடியவை எவையும் இல்லை; எவையும் கண்டுபிடிக்கப்படவும் இல்லை. அப்படிப்பட்ட மக்களுக்கு அளவற்ற இன்பத்தை எவ்விதச் சிரமமும் இன்றி அளித்தவை ஆண் பெண் உறுப்புக் களேயாகும்.

தங்கள் இனம் பெருகுவதற்கும், தன்னிகரில்லா இன்பம் கிடைப்பதற்கும் காரணமான ஆண் உறுப்பின் மீதும், பெண் உறுப்பின் மீதும் அவர்களுக்கு அளவு கடந்த நன்றியும் மரியாதையும் ஏற்பட்டது. எனவே, அவற்றை வழிபட்டனர்.

அவ்வாறு வழிபட ஆண் உறுப்பும், பெண் உறுப்பும் பொருந்தியது போன்ற உருவங்களை அமைத்தனர்.

ஆண் உறுப்பும் பெண் உறுப்பும் இணையும்போது தன் இனவிருத்தியும் ஏற்படுகிறது. இன்பமும் ஏற்படுகிறது என்பதால், அவ்வுறுப்புகளை இணைத்து வழிபட்டனர்.

இக்காலத்தில், ஆயுத பூசை என்ற பெயரில் மக்கள் தங்களுக்குப் பயன்படக் கூடிய கருவிகளை வழிபடுவதைக் காணலாம்.

தச்சன் தனக்குப் பயன்படும் கருவிகளையும் கொல்லன் தனக்குப் பயன்படும் கருவிகளையும், அவ்வாறே ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குப் பயன்படும் கருவிகளையும் வழிபடுதல் போலவே, அக்கால மக்கள் தங்களுக்கு அவசியம் என்று கருதப்பட்ட ஆண் பெண் உறுப்புக்களை வழிபட்டனர்.

இவ்வாறு ஆண் பெண் உறுப்புக்களைப் பொருத்தி வழிபட்ட வழக்கம் சிந்துவெளி மக்களிடம் மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளிலும் அக்காலத்தில் இருந்தது.

இந்த ஆண் பெண் உறுப்பு வழிபாட்டு முறைதான் பிற்காலத்தில் கதை கட்டப்பட்டு சிவலிங்கமாக்கப்பட்டது.

குரங்கின் முகம் சிவப்பாக இருப்பதைப் பார்த்தவர்கள், "குரங்கு ஒன்று சூரியனைப் பார்த்தது; அதைப் பழம் என்று எண்ணி அதன்மீது பாய்ந்தது; சூரியன் சுட்டெரிக்கவே அதன் முகம் சிவந்தது; அதனால்தான் குரங்குகளுக்கு முகம் சிவப்பாக இருக்கிறது" என்று கதைகட்டியது போல.

ஆண்களுக்குத் தொண்டையில் உருண்டையான கண்டம் இருப்பதைப் பார்த்தவர்கள், திருப்பாற் கடல் கடையப்பட்டபோது வெளிவந்த விஷத்தை சிவபெருமான் எடுத்துச் சாப்பிட்டார். அப்போது பக்கத்தில் இருந்த பார்வதி சிவபெருமானின் தொண்டையை கெட்டியாகப் பிடித்து விஷம் உள்ளே செல்லாமல் தடுத்தாள். விஷம் சிவனின் நடுத்தொண்டையிலே கெட்டியாக நின்று விட்டது. அதனால்தான் ஆண்களுக்கெல்லாம் நடுத் தொண்டையில் கெட்டியான கண்டம் இருக்கிறது என்று கதை புனைந்தது போல.

வளர்பிறைக்கும், தேய்பிறைக்கும், சூரிய கிரகணத்திற்கும், சந்திர கிரகணத்திற்கும் கதை கட்டியது போல.

அக்கால மக்கள் வழிபட்ட ஆண், பெண் உறுப்பு இணைந்த உருவங்களைக் கண்ட ஆரியர்கள் அதற்கேற்ப ஒரு கதையைக் கட்டினர்.

"ஒருநாள் சிவபெருமான் பார்வதியிடம் விடைபெற்றுக் கொண்டு காருகாவனம் வந்தான். அங்கு பல ரிஷிகளின் குடிசைகளைக் கண்டான். ரிஷிகள் எல்லோரும் வெளியில்

சென்றிருந்தனர். ரிஷிகளின் வீட்டில், ரிஷி பத்தினிகள் மட்டுமே தனிமையில் இருந்தனர். ரிஷிபத்தினிகள் எல்லோரும் இளம் பெண்கள். சிவந்த மேனி, சிங்கார நடை, கவர்ந்திழுக்கும் கண்கள், கதுப்பேறிய மார்பகங்கள். சிவன் பார்த்துவிட்டான். சிவனுக்குக் காமம் எழுந்தது. ரிஷிபத்தினிகளை நெருங்கினான்.

காம வேட்கை வெறியானது. கட்டிப் பிடித்தான் ஒரு கட்டிள பெண்ணை. வெறியில் ஒரு வேகம் பிறந்தது. அவள் உடலில் ஒட்டியிருந்த உடைகளை உருவி எறிந்து அவளைப் புணர்ந்தான். வெறி அதிகமாயிற்று. அவளைத் தள்ளிவிட்டு அடுத்து ஒருத்தியைப் புணர்ந்தான். அடங்கவில்லை. அடுத்து ஒருத்தி, அடுத்து ஒருத்தி... கெடுத்துக் கொண்டே சென்றான்.

இறுதியில் ஒருத்தி அவளையும் புணர்ந்து கொண்டிருந் தான். அப்போது வெளியில் சென்றிருந்த ரிஷிகள் அங்கு வந்துவிட்டனர். காட்சியைக் கண்டனர். கடுங்கோபங் கொண்டனர்.

"எங்கள் பத்தினியை கெடுத்த உன் ஆண் உறுப்பு அறுந்து விழக்கடவது!" என்று சிவனுக்குச் சாபமிட்டனர்.

சிவனின் ஆண் உறுப்பு அறுந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது. முப்பத்து முக்கோடி தேவர்களும் இதைக் கண்டனர்.

சிவனின் ஆண் உறுப்பு கீழே விழுந்தால் உலகமே அழிந்துவிடும் என்று அஞ்சினர். எனவே, பார்வதியிடம் கெஞ்சினர்.

"அம்மா தாயே! அது கீழே விழாமல் நீங்கள்தான் அருள் செய்ய வேண்டும்" என்றனர்.

பார்வதி பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள். அறுந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த சிவனின் ஆணுறுப்பைத் தனது பெண்ணுறுப்பால் தாங்கினாள்.

"இதுவே சிவலிங்கம்!"

அதாவது, சிவனின் ஆண் உறுப்பும் பார்வதியின் பெண்ணுறுப்பும் இணைந்ததே சிவலிங்கம் என்று ஒரு கதை கட்டினர். ஆதாரம்: லிங்க புராணம்.

இவ்வாறு கதை கட்டப்பட்ட பின்தான், ஆண் பெண் உறுப்பு வழிபாடு சிவலிங்க வழிபாடாக ஆக்கப்பட்டது.

உறுப்பு வழிபாடுதான் லிங்க வழிபாடு என்பதை "நாகலிங்க" வழிபாடு உறுதி செய்கிறது. பாம்புகள் உடலுறவு கொள்ளும் கேவலம்தான் நாகலிங்கம். மனித உடலுறவு இணைப்புதான் இந்த லிங்கம். ஆக லிங்கம் என்பது உறுப்புகள் இணைப்பையே குறிக்கும்.

எனவே, பண்டைத் தமிழர்கள் வழிபட்டது ஆண் பெண் உறுப்புகளைத்தானே தவிர சிவலிங்கத்தை அல்ல.

அக்கால மக்களிடம் சிவன் விஷ்ணு போன்ற கடவுள் வழிபாடு இருந்தது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை.

(ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தபோது அவர்களிடம்கூட கடவுள் வழிபாடு இல்லை. அவர்களும் இயற்கையையே சூரியன் முதலியவற்றையே வழிபட்டனர் என்கிறது ரிக் வேதம். பிற்காலத்தில்தான் தமிழ் மக்களை ஏமாற்றிப் பிழைக்க கடவுள்களையும், கதைகளையும் உருவாக்கினர்.)

எனவே, பண்டைத் தமிழர்களிடம் எந்தவிதக் கடவுள் வழிபாடும் இல்லை என்பதும், எவ்விதச் சடங்குகளும் இல்லை என்பதும், தங்களுக்குப் பயன்பட்டவைகளையும், நிலத் தலைவர்களையும், சிறந்த வீரர்களையும், பத்தினிப் பெண்களையும், குடும்பப் பெரியோர்களையுமே வழிபட்டனர் என்பதும் தெளிவாகிறது.

3. பழந்தமிழர் வாழ்வில் பார்ப்பனர்கள் புகுந்தது எப்படி?

ஆரியர் வருகை:

ஆரியர்களின் பூர்வீகம் மத்திய ஆசியாவாகும். அங்கிருந்து அவர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஒரு பகுதி ஆரியர்கள். கைபர் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் புகுந்தனர். இந்தியாவிற்குள் ஆரியர்கள் புகுந்த காலம் கி.மு. 2000க்கும் 1500க்கும் இடைப்பட்ட காலமாகும். (அதாவது 3500 ஆண்டுகளுக்கு முன்) அவ்வாறு நுழைந்தவர்கள் மெல்ல மெல்ல வடஇந்தியப் பகுதி முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர். ஆடு மாடுகளை மேய்த்து ஆரம்பத்தில் தங்கள் வாழ்வை நடத்தியவர்கள் நாளடைவில் பல தொழில்களையும் செய்ய ஆரம்பித்தனர்.

தமிழகத்தில் ஆரியர் நுழைவு:

இந்தியாவின் வடபகுதியில் பரவி வாழ்ந்த ஆரியர்களில் சிலர் (வயது முதிர்ந்தவர்கள்) தமிழகத்தில் இருந்த காட்டுப் பகுதிகளை வந்தடைந்தனர். அவர்கள், தமிழகத்தில் சமுதாயத் தொண்டாற்றிய அந்தணத் தமிழர்களை அணுகி, அவர்களோடு நெருங்கி வாழ்ந்தனர். தமிழ் மொழியையும் கற்கத் தொடங்கினர். சில ஆரியர்கள் குடும்பத்துடன் காடுகளில் வாழ்ந்தனர்.

நாளடைவில் அதிக அளவிலான ஆரியர்கள் தமிழகத்திற்குள் நுழைந்தனர். ஆரம்பத்தில் தமிழகத்தின்

காட்டுப் பகுதிகளிலும், எல்லைப்புறங்களிலும் தங்கி வாழ ஆரம்பித்தவர்கள், காலம் செல்லச் செல்ல நாட்டில் உட்புறங்களிலும் புகுந்து வாழ ஆரம்பித்தனர்.

இவ்வாறு தமிழ்நாட்டிற்குள் புகுந்து ஆரியர்கள் ஆரம்பத்தில் எந்தத் தொழிலையும் செய்யாமல், தமிழர்களிடம் பிச்சையெடுத்தே வாழ்ந்து வந்தனர். அயல்நாட்டுக்காரர்கள் என்பதால் அந்த ஆரியர்களை பரதேசி (அயல்நாட்டுக்காரன்) என்று அழைத்தனர். இக்காலத்தில் கூட பிச்சையெடுப்பவர்களைப் பரதேசி என்று பெயர் சொல்லி அழைப்பதைக் காணலாம். அயல்நாட்டு ஆரிய பிச்சைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட பெயர் நாளடைவில் பிச்சையெடுக்கின்ற அனைத்துப் பேர்களுக்கும் பொதுவாகி விட்டது.

இவ்வாறு தமிழகத்துக்குள் நுழைந்து ஆரியர்களை அந்தணத் தமிழர்கள் அன்போடு உபசரித்தனர். ஒரு சில ஆரியர்கள் தமிழகத்தை ஆண்ட அரசர்களையும், செல்வர்களையும் அண்டி வாழ்ந்தனர்.

ஆரியர்கள் பார்ப்பனர்கள் ஆனது எப்படி?

“பார்ப்பு” என்ற சொல்லிலிருந்தே பார்ப்பனர் என்ற சொல் உருவாயிற்று. பார்ப்பு என்பதற்கு இளமை என்பது பொருள்.

பண்டைக்காலத்தில் விலங்கினங்களின் சிறு குட்டிகளுக்கும், பறவைகளின் குஞ்சுகளுக்கும் பார்ப்பு என்னும் சொல் வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது இளமை என்னும் பொருளில்.

“பார்ப்புடை மந்தி மலையிறந்தோரே”

(குறு-276)

“தன் பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை” (ஐங்-41)

என்ற சங்க நூல்களில் காணப்படும் வரிகளே இதற்குத் தக்கச் சான்றாகும்.

இளங்குழந்தைகளை "பாப்பா" என்று அழைப்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது. பார்ப்பு என்பது பார்ப்பா என்றாகி பின்னர் பாப்பா என்று வழக்கத்தில் ஆகியது.

கோர்ப்பு என்பது கோப்பு (file) என்று வழக்கத்தில் மாற்றி வழங்கப்படுவது போலவே, பார்ப்பா என்பது பாப்பா ஆனது.

ஆக, மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பார்ப்பு என்றால் இளமை என்று பொருள் என்பது விளங்குகிறது.

தமிழ் மன்னர்களின் அரண்மனையிலும், பெருஞ் செல்வர்களின் வீடுகளிலும் உள்ள இளைஞர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்த தமிழர்களே பார்ப்பனர் ஆவர்.

அதாவது இளம் பருவத்தில் (பார்ப்புப் பருவத்தில்) உள்ளவர்களுக்கு உதவியாளாகப் பணி செய்தவர்கள் என்பதால் அந்த உதவியாளர்கள் பார்ப்பனர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

பார்ப்பனர் என்பதற்கு இளைஞர்களின் துணைவன் என்று அர்த்தம். பார்ப்பனர் என்பது ஒரு வேலையின் (தொழிலின்) பெயரே ஆகும்.

எழுத்து வேலை செய்கின்றவர் எழுத்தர் என்று அழைக்கப்படுவது போல பார்ப்புக்கு (இளைஞர்களுக்கு) உதவி புரிந்தவர்கள் பார்ப்பனர் என்று அழைக்கப்பட்டனர்.

தொடக்கக் காலத்தில் இந்த பார்ப்புத் தொழிலைச் செய்தவர்கள் தமிழர்களே ஆவர். அவர்களே முதலில் பார்ப்பனர் என்று அழைக்கப்பட்டனர்.

ஆனால், நாளடைவில் இத்தொழிலை ஆரியர்கள் ஏற்க ஆரம்பித்தனர்.

தமிழகத்தின் காடுகளில் தங்கியும், ஊருக்குள் பிச்சையெடுத்தும் வாழ்ந்த ஆரியர்கள், காலப்போக்கில் தமிழ் மொழியையும் ஓரளவிற்குக் கற்றுக் கொண்டனர். ஆரியர்கள் சிவப்பு நிறமுடையவர்களாகவும், மிகவும் கனிவுடையவர் களாகவும் இருந்ததால், அவர்களைத் தமிழ் மன்னர்களும், செல்வந்தர்களும் தங்களுடைய வீட்டில் பார்ப்புத் தொழிலுக்கு அமர்த்தினர். அதாவது தங்களுடைய வீடுகளில் உள்ள இளைஞர்களுக்கு உதவியாளராக அமர்த்தினர்.

நாளடைவில் பார்ப்பு வேலைகளுக்குப் பார்ப்பனர்களே பெருமளவில் அமர்த்தப்பட்டனர். இதனால் தமிழர்களுக்குப் பார்ப்பு வேலை கிடைக்கவில்லை.

தற்காலத்தில், வாயில் காக்கும் வேலை வடநாட்டு கூர்க்கர்களுக்கு உரிமையானது போல, அக்காலத்தில் பார்ப்புத் தொழிலும் வடநாட்டு ஆரியர்களுக்கே உரிமையானது.

பார்ப்புத் தொழில் செய்தவர்களுடைய முக்கியப் பணிகள் ஆறு ஆகும். இவை தொல்காப்பியத்தில் தெளிவாகக் விளக்கப்பட்டுள்ளன.

"காமநிலை யுரைத்தலும், தேர்தல்நிலை யுரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்,
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்,
செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்,
அன்னவை பிறவும் பார்ப்புக் குரிய"

– *(கற்பு-36)*

1. காம நிலையுரைத்தல் : இளைஞர்களின் காதல் விவகாரங்களில் ஆலோசனைக் கூறுதல்.

2. தேர்தல் நிலையுரைத்தல் : காதலால் ஏங்கும் இளைஞனுக்கு அவன் ஆறுதல் அடையும்படி பல காரணங் களை எடுத்துக் கூறி அவனைத் தேற்றுதல்.

3. கிழவோன் குறிப்பினைக் கூறல் : காதலன் நிலையை காதலிக்கு எடுத்துக் கூறல்.

4. ஆவொடுபட்ட நிமித்தம் கூறல் : பல்வேறு சகுனங்களை ஆராய்ந்து அதற்கு அர்த்தத்தைக் கூறல்.

5. செலவுறு கிளவி : இளைஞன் தன் காதலியைச் சந்திக்கச் செல்ல வேண்டிய சரியான காலத்தை ஆராய்ந்து கூறுதல். காதலியின் சூழ்நிலையை அறிந்து எப்போது அவளைச் சந்தித்தல் உகந்ததோ அப்போது அனுப்புவான்.

6. செலவு அழுங்கு கிளவி : செல்லக்கூடாத நேரத்தில் காதலியைச் சந்திக்கப் புறப்பட்டால், இப்போது செல்லுதல் சரியல்ல என்று தடுத்தல்.

இவ்வாறு அயல்நாட்டிலிருந்து வந்த ஆரியர்கள், பார்ப்புத் தொழிலை முழுமையாக மேற்கொண்டு, பின்னாளின் பார்ப்பனர் என்றால் ஆரியர்களே என்று சொல்லுமளவிற்கு ஆகிவிட்டனர்.

ஆரியர்களுக்குப் பார்ப்பனர் என்ற பெயர் தமிழ் நாட்டில் மட்டுமே வழங்கப்படுகிறது. மற்ற இடங்களில் அவர்கள் பார்ப்பனர் என்றால் ஆரியர்களே என்று அழைக்கப்படுவதில்லை. இது மேற்கண்ட உண்மையை இன்னும் உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறு தமிழகத்திற்குள் நுழைந்த ஆரியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. அவர்களுடைய தோற்றம் செல்வந்தர்களையும், அரசர்களையும் வெகுவாகக் கவர்ந்தது.

நாளடைவில் அரண்மனையிலும், செல்வந்தர் குடும்பங்களிலும் முக்கிய இடத்தைப் பெற்றனர். இதன் மூலம் மக்கள் மத்தியிலும் செல்வாக்கு பெற்றனர்.

தமிழர்களின் வெள்ளை உள்ளத்தைப் புரிந்து கொண்ட ஆரியர்கள், அவர்களை சூழ்ச்சியால் ஏமாற்ற முடியும் என்ற முடிவிற்கு வந்து, தங்கள் கருத்துக்களை மெல்ல மெல்ல தமிழர்களிடையே புகுத்தினர். இவ்வாறு தமிழகத்திற்குள் புகுந்த ஆரியர்கள், தமிழர்களிடையே தங்கள் கருத்துக்களைப புகுத்தினர்.

4. தமிழர்கள் வாழ்வு தடம்புரண்டது எப்படி?

தமிழனுடைய வாழ்வைப் பற்றியும், அவனது வழிபாட்டைப் பற்றியும், அவனது நாட்டிலும், அவனது வாழ்விலும் ஆரியர்கள் புகுந்தமைப் பற்றியும் இதுவரை கண்டோம்.

இவ்வாறு ஆரியர்கள் தமிழ்நாட்டிலும் தமிழர் வாழ்விலும் புகுந்ததன் பயனாய் தமிழர்களின் தனிச் சிறப்புடைய வாழ்வு தடம்புரள ஆரம்பித்தது.

ஆரியர்கள் தமிழகத்திற்குள் புகுந்தபோது தமிழர் நிலையும் ஆரியர் நிலையும்

தமிழர்கள் கருப்பு நிறமும், வலுவான உடலும், உறுதியான உள்ளமும், நேர்மையான எண்ணமும் கொண்டு விளங்கினர்.

ஆரியர்கள் செந்நிறமும், வலுக்குறைவான உடலும், கபடமான உள்ளமும் சூழ்ச்சியான எண்ணமுங் கொண்டிருந்தனர்.

தமிழர்கள் மீசையை வளர்த்து முறுக்கிவிட்டனர். ஆரியர்கள் மீசையை சிரைத்துக் கொண்டனர்.

பூணூலைப் பார்ப்பனர்கள் அணிந்தனர். தமிழர்களிடையே அவ்வழக்கம் இல்லை.

தமிழர்கள் தமிழ்மொழி பேசினர். ஆரியர்கள் பாரசீகம், கிரேக்கம், ஆரியம் கலந்த மொழி பேசினர். ஆரியர்

தமிழகத்திற்குள் வந்த புதிதில் தமிழைச் சரியாகப் பேசக் கற்றுக் கொள்ளவில்லை. அரைகுறையாகத் தமிழைப் பேசினர். நாளடைவில் நல்ல முறையில் பேசக் கற்றுக் கொண்டனர்.

தமிழர்களோடு நெருங்கி வாழாது, ஆரியர்கள் தனித்தே வாழ்ந்தனர்.

தமிழ்நாட்டிற்கு வந்த ஆரியர்கள், தமிழரோடு திருமண உறவு எதுவும் வைத்துக் கொள்ளவில்லை.

ஆரியர்கள் தமிழ்நாட்டிற்குள் குடியேறிய விதம் :

ஆரியர்கள் ஒரே முறையில் பெருங்கூட்டமாய் தமிழ்நாட்டிற்குள் புகுந்து விடவில்லை. பல தடவைகளில் சிறு சிறு கூட்டமாய் தமிழகத்திற்குள் நுழைந்தனர்.

தமிழரசர்களே பலமுறை ஆரியர்களைக் கூட்டங் கூட்டமாய் வட இந்தியாவிலிருந்து தமிழகத்திற்குள் கொண்டு வந்து குடியேற்றியிருக்கின்றனர். "1700 ஆண்டுகளுக்கு முன் தொண்டை மண்டலத்தை ஆண்ட பம்ப மகாராசன் வடநாட்டிலிருந்து, ஆத்திரேய ஹாரித பிரத்துவாஜ கௌசிக காசிப வத்ஸ கோத்திரங்களைச் சேர்ந்த, பல ஆரிய குடும்பங்களை வரவழைத்துத் தொண்டை நாட்டில் குடியேற்றி, அக்குடும்பங்களுக்கு நிலங்களை அளித்தான். பம்பன் காலத்திற்குமுன் ஆரியர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக வந்து குடியேறி வாழவில்லை.

"சுந்தர பாண்டியன் என்னும் அரசர் பல ஊர்களில் இருந்த நூற்றியெட்டு தலவகார சாமவேதிகளாகிய வைணவ ஆரியர்களைத் தென் திருப்பேரைக்குக் கொண்டு வந்து அவர்களுக்கு வீடுகளும் நிலங்களும் வழங்கியிருக்கிறான்."

(ஆதாரம் : ஒப்பியன் மொழிநூல்)

ஆரியர்களின் தோற்றத்தையும், அவர்களின் பணிவையும், நயமான பேச்சையும் விரும்பியே இவ்வாறு அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அரசர்கள் கொண்டு வந்தனர்.

இவ்வாறு தாங்களாகவும், அரசர்கள் மூலமும்ஆரியர்கள் தமிழ்நாட்டிற்குள் அதிக அளவில் நுழைந்து விட்டனர்.

ஆரியர்கள் பார்த்த தொழில்கள் :

முன்னர் சொல்லப்பட்டது போல அரசர் குடும்பங்களிலும், செல்வந்தர் குடும்பங்களிலும் பார்ப்பு வேலை செய்தனர்.

சில ஆரியர்கள் வேதம் ஓதி வேள்வி செய்யும் தொழிலை மேற்கொண்டனர். அவ்வாறு வேதம் ஓதி வேள்வி செய்த பார்ப்பான் "வேளாளப் பார்ப்பான்" என்று அழைக்கப்பட்டான்.

ஆனால், தொல்காப்பியர் காலத்தில் ஆரியர்கள் பார்ப்புத் தொழிலை மட்டுமே செய்தனர்.

பின்னாளில், தங்கள் (ஆரியர்) கருத்துக்களை மெல்லப் புகுத்தியதன் விளைவாய் தமிழர்களிடையே மூடநம்பிக்கை வளரவே, வேள்வி செய்யும் முறையும் தமிழ்நாட்டில் ஏற்பட்டது. அதன் விளைவாய் ஆரியர்களுக்கு வேள்வி செய்தலும் ஒரு தொழிலாக அமைந்தது.

புரோகிதர் தொழில் :

தமிழகத்திற்குள் நுழைந்த ஆரியர்கள், தமிழரிடையே இருந்த இயற்கை வழிபாடு, நிலத் தலைவர் வழிபாடு, பெரியவர்கள் வழிபாடு, பத்தினிப் பெண்டிர் வழிபாடு ஆகியவற்றைத் தங்கள் கற்பனையின் உதவியால் மாற்றி அமைத்தனர்.

புராணக் கதைகள் பலவற்றை உருவாக்கி தமிழர்களின் மேற்கண்ட வழிபாட்டு முறையை கடவுள் வழிபாட்டு

முறையாக, சடங்குகள் கொண்ட வழிபாட்டு முறையாக மாற்றி அமைத்தனர். அவ்வாறு மாற்றி அமைத்து - கோயில்களை உண்டாக்கி, அக்கோயில்களில் புரோகிதர்களாக தாங்களே தொழில் புரிய ஆரம்பித்தனர்.

(ஆதாரம் : ஒப்பியன் மொழிநூல்)

பயன் கருதி இயற்கையை வணங்கியும், மரியாதை செலுத்தும் பொருட்டு பெரியவர்களை வழிபட்டும் வந்த தமிழர்கள், மெல்ல மெல்ல பார்ப்பனர்களின் வார்த்தைகளுக்கு மயங்கி, அவர்களின் கற்பனைக் கதைகளை உண்மையென்று எண்ணி, அவர்கள் உருவாக்கிய கடவுள்களையெல்லாம் வழிபட ஆரம்பித்தனர்.

வழிபட்டது மட்டுமல்ல, ஆரியர்கள் தங்கள் சுயநலம் கருதி ஏற்படுத்திய சடங்குகள் பலவற்றையும் பின்பற்ற ஆரம்பித்தனர்.

பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியும், பல்யானைச் செல்குழு குட்டுவனும் பல வேள்விகளை ஆரியர்களை வைத்து நடத்தியிருக்கின்றனர்.

இவ்வாறு கடவுள்களையும், மூடக் கொள்கைகளையும் தமிழர்களிடையே புகுத்திய ஆரியர்கள் தங்களுக்கு செல்வாக்கையும், உயர்வையும், தகுதியையும் தேடிக் கொண்டனர்.

அமைச்சர் தொழில் :

தமிழ்நாட்டில் பார்ப்பு வேலை செய்ய அரண்மனையுள் புகுந்தவர்கள் நாளடைவில் சமுதாய செல்வாக்குப் பெற்று, அரசவையில் அமைச்சராகும் தகுதியையும் பெற்றனர். மனுநீதிச் சோழனின் அமைச்சனும், பாண்டியனின் மந்திரி மாணிக்கவாசகரும் ஆரிய மந்திரிகளே ஆவர்.

மேற்கண்ட நான்கு தொழில்களும் கிடைக்காத ஏனைய ஆரியர்கள் 18-ம் நூற்றாண்டு வரை பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தனர்.

"*முட்டிபுகும் பார்ப்பார்*" என்று கம்பர் கூறுவதும்,

"*பார்ப்பன முதுகன் படிம வுண்டியன்.........*

இரந்தூண் தலைக் கொண்டிந்நகர் மருங்கிற்

பரந்துபடு மனைதொருந் திரிவோன்..."

என்ற மணிமேகலை அடிகளும் (5, 33-46)

கூரத்தாழ்வான், இராமப்பிரமம் முதலியவர்களின் குறிப்புகளும் தெரிவிக்கின்றன.

வேலை தேடியும், குடியிருக்க இடம் இன்றியும் பல பார்ப்பனர்கள் காட்டு வழியில் அலைந்து திரிந்ததை,

"உடன்போக்கில் வேதியரை வினவல் என்னுந்துறையும்"

"ஒருவாய் சோற்றுக்கு ஊர்வழியே போனான் பார்ப்பான்"

"பார்ப்பானுக்கும் பன்றிக்கும் பயணச் செலவு இல்லை."

என்னும் பழமொழிகளும், ஆரியர்கள் பிச்சையெடுத்து வாழ்ந்தமையை விளக்குகின்றன.

(ஆதாரம் : ஒப்பியன் மொழிநூல்)

ஆரியர்களின் சூழ்ச்சிக்கு
தமிழன் அடிமையான விதம் :

தமிழ் மக்களின் வெள்ளையுள்ளத்தைக் கண்ட ஆரியர்கள் தமிழர்களை சூழ்ச்சியால் வெற்றி பெற்றுவிடலாம் என்ற முடிவுடன் பல சூழ்ச்சிகளைச் செய்தனர்.

சமுதாயத்தில் உயர்நிலையில் உள்ள தமிழர்களை (அரசர்கள், செல்வந்தர்கள் போன்றவர்களை) தங்கள் வயப்படுத்தினால், அனைத்து மக்களையும் தங்கள் வயப்படுத்தி விடலாம் என்று ஆரியர்கள் உறுதியாய் நம்பினர்.

எனவே, முதலில் அரசர்களையும் செல்வந்தர்களையும் அண்டி அவர்களிடம் வேலைக்கு அமர்ந்தனர். அவர்கள் தங்களை மிகவும் விரும்பும்படி பணிவுடனும், குறிப்பறிந்தும் நடந்து கொண்டனர்.

அவர்களின் அன்பினையும், ஆதரவினையும் பெற்ற ஆரியர்கள் நாளடைவில் அவர்களுக்குப் பல பிரச்சினைகளில் ஆலோசனை கூறவும் ஆரம்பித்தனர்.

பின்னர், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தங்கள் கருத்தையும் மெல்ல மெல்ல அவர்களிடம் புகுத்தினர்.

காலப்போக்கில் அரசர்களும், செல்வந்தர்களும் ஆரியர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்ததோடு நில்லாமல், ஆரியர்களின் கருத்துக்களைப் பின்பற்றவுந் தொடங்கினர்.

அரசர்களிடமும், செல்வந்தர்களிடமும் ஆரியர்களுக்கு செல்வாக்கு வளரவே, மற்றவர்களும் ஆரியர்களுக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கினர்.

இவ்வாறு தமிழர்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு பெற்ற ஆரியர்கள், சமுதாயத்தில் தங்களுக்கு உயர்ந்த இடத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் முயற்சித்தனர்.

காலை நேரத்தில் எழுந்து, ஆற்றில் குளித்துவிட்டு ஆற்றங்கரையில் அமர்ந்து வேதங்களை நீண்ட நேரம் ஓத ஆரம்பித்தனர். அவ்வாறு வேதம் ஓதுகின்ற ஆரியர்களைக் கண்ட தமிழர்கள், அவர்களுக்கு மிகுந்த மரியாதை

கொடுத்தனர். பல தமிழர்கள் அந்த ஆரிய முனிவர்களை வணங்கவுஞ் செய்தனர்.

இவ்வாறு தமிழர்களிடையே நல்ல மதிப்பையும், உயர் நிலையையும் பெற்ற ஆரியர்கள், தமிழர்களை என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாக்க திட்டம் தீட்டினர். தமிழர்களை வீழ்த்த, தாழ்ந்த பக்தியே சிறந்த ஆயுதம் என முடிவெடுத்தனர்.

அம்முடிவின்படி பல்வேறு கடவுள்களையும், பல்வேறு சடங்குகளையும், பல்வேறு புராணங்களையும் உருவாக்கி தமிழர்களிடையே புகுத்தினர்.

தமிழரிடையே மோட்சத்தைப் பற்றிக் கூறினர். இறப்பிற்குப் பின் சிறப்பாக வாழவும், இப்பிறவியில் நன்மைபெற இறைவனை வழிபடுவதும், இறைவனுக்குப் பூஜை செய்வதுமே வழி என்று தமிழர்களுக்குப் போதித்தனர்.

இவ்வாறு இம்மையிலும், மறுமையிலும் நலம்பெற இறைவனிடம் அருள் பெற்றுத் தர தங்களுக்கே தகுதியுண்டு என்று ஆரியர்கள் கூறினர்.

தாங்கள் பூமியிலுள்ள மக்களுக்கெல்லாம் தேவர்கள் என்று கூறி, தங்களைப் "பூதேவர்கள்" என்று அழைத்துக்கொண்டனர்.

நாளடைவில் தமிழர்களிடையே கடவுள் நம்பிக்கை கண்மூடித்தனமாக வளர ஆரம்பித்தது. ஆரியர்களை வணங்கத் தக்கவர்களாகக் கருதினர். தமிழ் மன்னர்கள் ஆரியர்கள் கூறுகின்றபடியெல்லாம் கோயில்களை அமைத்தனர். ஆரியர்களை தங்கள் குருவாகக் கொண்டனர். ஆரியர்களுக்கு ஏராளமான பொருட்கள் வாரி வழங்கினர்.

தஞ்சைப் பெரிய கோவிலின் கர்ப்பக் கிரகத்தின் தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டு ஒன்று, தமிழ் மன்னர்களிடம்

ஆரியர்கள் பெற்றிருந்த செல்வாக்கையும், அரசர்கள் அவர்களுக்கு அளித்த உதவியையும் நன்கு விளக்குகிறது.

கல்வெட்டில் உள்ள வரிகள் :

"உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலுனுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத் தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தானம் செய்தருளா இருந்து உடையார் ஸ்ரீராஜ ராஜீஸ்வரமுடையார் கோயிலில் ஆச்சார்ய போகம் நம்உடையார் சர்வ சிவபண்டித சைவாச்சாரியார்க்கும் இவ்வுடையார் சிஷ்யரும் பிற சிஷ்யருமாய் ஆரிய தேசத்தும், மத்தியபிரதேசத்துத்தான் கௌடதேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆண்டாண்டு தோறும் இத்தேவர் கோயிலில் ஆடவல்லானென்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரங்கல நெல்லு ஆண்டாண்டு தோறும் சந்திரா தித்தவல் பெறத்திருவாய் மொழிந்தருளத் திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தினால்... இத்திருவாய்க் கேள்விப்படி கல்லில் வெட்டித்து இது இவ்வம்சத்துள்ள சைவ ஆச்சார்யர்களே இத்தன்மம் ரக்ஷிக்க..."

இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள செய்தியின் சுருக்கம் :

தஞ்சை இராஜ இராஜ இராஜேச்சுரக் கோயிலில் இருந்த தன் குருவாகிய சர்வசிவ பண்டிதர்க்கும் (ஆரியர்) வடஇந்தியாவில் ஆர்யதேசம், கௌடதேசம், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் அவருடைய சிஷ்யர்களுக்கும் சூரிய சந்திரன் உள்ளவரை ஆண்டுதோறும் இரண்டாயிரங்கலம் நெல் அளிக்குமாறு முதல் இராசேந்திர சோழன் ஏற்பாடு செய்திருந்தான்.

பார்த்தீர்களா! தமிழ்நாட்டிலிருந்த தன் குருவாகிய ஆரிய பார்ப்பானுக்குக் கொட்டிக் கொடுத்ததோடு நில்லாமல், அந்த ஆரியனின் வடநாட்டு சிஷ்யர்களுக்கும் கொட்டிக் கொடுத்திருக்கிறான். ஒரு கலமா இரண்டு கலமா, இரண்டாயிரங்கலம் நெல். ஓராண்டிற்கா இரண்டாண்டிற்கா, சூரியன் சந்திரன் உள்ளவரை.

இதிலிருந்து ஆரியர்கள் பெற்றிருந்த செல்வாக்கையும், அரசர்கள் அவர்களுக்கு அளித்த ஆதரவையும் நன்கு உணரலாம்.

சாதிப் பிரிவினையை உருவாக்கல் :

தமிழரிடையே மதிப்பும், உயர்வும் பெற்ற ஆரியர்கள் அந்த மதிப்பையும் உயர்வையும் நிலையாக உறுதிப்படுத்திக் கொள்ளவும், தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளவும் ஒற்றுமையாய் உள்ள தமிழர்களைப் பிரித்து வைக்கத் திட்டமிட்டனர்.

இந்த முடிவின்படி, தமிழரைப் பிரிக்க அவர்களிடையே சாதிப் பாகுபாட்டை உருவாக்குவதே சரியான வழியென்று முடிவு செய்தனர்.

தமிழர்களிடையே இருந்த இயற்கை வணக்கத்தையும், பெரியவர்கள் வழிபாட்டையும் கடவுள் வழிபாடாக மாற்றிய ஆரியர்கள், அதே வகையில் தமிழர்களிடையே இருந்த தொழில் அடிப்படையிலான பாகுபாட்டையும் சாதிகளாக ஆக்க முடிவு செய்தனர்.

ஆரம்பத்தில் தமிழர்கள் செய்து வந்த பார்ப்புத் தொழிலை ஆரியர்கள் தங்களுடையதாக ஆக்கிக் கொண்டு பார்ப்பனர்கள் ஆனதுபோல, நாளடைவில் அந்தணப் பணியையும் மேற்கொண்டு செய்ய ஆரம்பித்தவர்கள் அந்தணர்கள் என்றாலே ஆரியர்கள் என்றாகிவிட்டனர்.

தமிழர்கள் அந்தணர் பணி செய்யும்போது அவர்கள் சமுதாயப் பணியினைச் செய்தனர். ஆனால் ஆரியர்கள் அந்தணர் பணி செய்ய ஆரம்பித்தபின், அந்தணர் பணியைச் சமயப்பணியாக்கிவிட்டனர். கடவுள் பணி, கடவுள் கொள்கையைப் பரப்புதல், சடங்குகள் செய்தல், யாகங்கள் நடத்துதல் போன்றவை அந்தணர்களுக்கு உரியது என்று ஆக்கிவிட்டனர்.

ஆரியர்கள் அந்தணர்கள் ஆனபிறகு தமிழரிடையே இந்தத் தொழில் பிரிவு மூன்றாக ஆனது.

அதாவது அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகளே தமிழரிடம் இருந்தது.

இந்நிலையில், கடவுள் பணி செய்கின்றவர்கள், அரசு புரிகின்றவர்கள், வணிகம் செய்கின்றவர்கள், வேளாண்மை செய்கின்றவர்கள் என்கிற தொழில் பிரிவுகள் தமிழ்நாட்டில் நிலவின.

அதாவது, ஆரியர்கள் செல்வாக்கடைந்த காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் 1. தமிழர், 2. ஆரியர் என்ற இரு இனப் பிரிவும், தமிழரிடையே 1. அரசர், 2. வணிகர், 3. வேளாளர் என்ற தொழில் பிரிவும் காணப்பட்டன.

சாதியை உருவாக்கி தமிழர்களிடையே பிரிவினையை ஏற்படுத்த திட்டமிட்ட ஆரியர்கள், இந்த நான்கு பிரிவையும் (1. ஆரியர், 2. அரசர், 3. வணிகர், 4. வேளாளர்) நான்கு வருணங்களாக ஆக்கத் திட்டமிட்டனர்.

தமிழர்களிடையே முன்கூட்டியே புராண நம்பிக்கையையும், கடவுள் நம்பிக்கையையும் உருவாக்கியிருந்த ஆரியர்கள், அந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் சாதியைப் பிரிக்கவும் முடிவு செய்தனர்.

பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்கள் ஆரியர்கள் என்றும், தோளில் பிறந்தவர்கள் அரசர்கள் என்றும், தொடையில் பிறந்தவர்கள் வணிகர்கள் என்றும், காலில் பிறந்தவர்கள் வேளாளர்கள் என்றும் கதையைச் சொல்லி வந்தனர்.

மேற்கண்ட பிரிவுகளும் முறையே, 1. பிராமணன், 2. க்ஷத்திரியன், 3. வைசியன், 4. சூத்திரன் என்று வருணப் பெயரைச் சூட்டினர்.

பிரம்மனுக்குத்தான் நான்கு முகம் என்கிறாயே ஏனடா நான்கு சாதியினரும் நான்கு முகத்தில் பிறக்கக்கூடாது என்று ஆரியனைப் பார்த்துக் கேட்கின்ற அளவுக்கு அன்றையத் தமிழனுக்கு விழிப்புணர்ச்சியில்லாமல் போய்விட்டது. பக்தியினால் பகுத்தறிவுப் பார்வையின்றிப் போய்விட்டான்.

இன்றைக்குக்கூட எல்லாத் தமிழர்களுக்கும் அந்தக் கேள்வியைக் கேட்கக்கூடிய அளவிற்கு விழிப்புணர்ச்சி வரவில்லையே!

பிரம்மனால் மேற்கண்ட நான்கு குலங்களும் உருவாக்கப்பட்டன என்று கூறியது மட்டுமல்ல, ஒவ்வொரு குலத்தவரும் தத்தம் தொழிலையே செய்ய வேண்டும்; ஒருவன் தன் குலத்தை இப்பிறவியில் மாற்ற முடியாது; எல்லாக் குலத்திலும் உயர்ந்தது பிராமண குலமே; காரணம் பிராமணன் முகத்தில் பிறந்தவன்; கடவுளுக்குத் தொண்டு செய்ய தகுதி படைத்தவன் என்று சாஸ்திரங்களில் சட்டங்களையும் உருவாக்கினர்.

கடைச்சங்கக் காலத்தில் ஆரியர்களால் உருவாக்கப்பட்ட இந்த வருணப்பிரிவு (குலப்பிரிவு) 16-ம் நூற்றாண்டில் நல்ல வலுப்பெற்றது.

ஆரியர்கள், மற்ற மூன்று பிரிவினர்களிடமும் முறையே, தீண்டாமை (untouchability) அண்டாமை (unapproachbility),

காணாமை (unseeability) என்ற மூன்று வித நடைமுறைகளைக் கடைப்பிடித்தனர்.

தொழில் அடிப்படையில் மட்டுமே வேறுபட்டிருந்த தமிழர்களை, ஆரியர்கள் தங்கள் சுயநலத்திற்காகப் பல சாதியினராகப் பிரித்து அவர்கள் ஒற்றுமையைக் குலைத்தனர். இவ்வாறு ஆரியர்களால் உருவாக்கப்பட்ட சாதிப் பிரிவுகள் நாளடைவில் மேலும் மேலும் சிதைந்து பல்வேறு சாதிகள் உருவாயின. ஒருவருக்கு ஒருவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணமும், ஒருவருக்கொருவர் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை என்ற வழக்கமும் வலுவடைய ஆரம்பித்தன.

_தமிழ்மொழி சீர்குலைக்கப்பட்டது :_

தமிழ்ச் சொற்களுடன் ஆரியச் சொற்களை அதிக அளவில் கலந்து ஆரியர்கள் பேசியும், எழுதியும் வந்தமையால், தமிழ்மொழியின் சிறப்பு, தனித்தன்மை பாதிக்கப்பட்டது. எது தமிழ்ச்சொல்? எது ஆரியச் சொல்? என்று தெரிந்து கொள்ளவே முயற்சி மேற்கொள்ள வேண்டிய அளவிற்குச் செய்துவிட்டனர். தமிழுடன் ஆரியத்தை வேண்டுமென்றே கலந்தனர்.

திருமண முறையில் மாற்றம் :

வயது வந்த ஆணும் பெண்ணும் காதல்கொண்டு பின் இல்வாழ்வு நடத்தியதையும், அதன் பின் பலர் அறிய எந்தவிதச் சடங்கும் இன்றி தமிழரிடையே திருமண முறை ஏற்படுத்தப்பட்டமையையும் முன்னர் கண்டோம்.

இப்படி பகுத்தறிவிற்கு உகந்த வகையில் திருமண முறையைக் கடைப்பிடித்து வந்த தமிழர்கள் மத்தியில் ஆரியர்கள் புகுந்தபிறகு, தமிழர்களின் திருமண முறையில் பெருமளவிற்கு மாற்றம் ஏற்பட்டது.

ஆரியர்கள் தங்கள் சுயநலத்திற்காக வேண்டி பல்வேறு சடங்குகளை ஏற்படுத்தினர்.

எரிவளர்த்தல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் போன்ற ஏராளமான சடங்குகளை உருவாக்கினர்.

ஆரியர்களுடைய தலைமையிலே திருமணம் நடைபெற வேண்டும் என்றும் முறை ஏற்படுத்தினர்.

அது மட்டுமின்றி, ஆரியர்களிடையே இருந்த வழக்கத்தைத் தமிழர்களுடைய திருமண உறவிலும் வெகுவாகப் புகுத்தினர்.

ஆரியர்களிடையே வழக்கத்திலிருந்த திருமண முறைகள்:

1. பிரமம் :

ஒரே கோத்திரத்தில், 48 வயது முடிந்த ஆணுக்கு, 12 வயது நிரம்பிய பருவமடைந்த பெண்ணை, இரண்டாவது மாதவிலக்கு வருமுன், நகைகள் பல அணிவித்து தானமாக அளிப்பது.

2. பிரசாபத்தியம் :

மணமகன் கொடுத்த பரிசுத் தொகையைப் போல இருமடங்கு மணமகளுக்குக் கொடுத்து, பெண்ணை அவனுக்குக் கொடுப்பது.

3. ஆரிடம் :

ஆண் பெண் மாடுகள் இரண்டின் கொம்புகளுக்கும், குளம்புகளுக்கும் பொன்னால் பூண் அணிவித்து, அவற்றின் நடுவில் மணமக்களை நிறுத்தி, பொன் அணிகள் அணிவித்து, பெண்ணை மணமகனுக்கு நீர் வார்த்துக் கொடுப்பது.

4. தெய்வம் :

வேள்வி செய்யும் ஆரியனுக்கு, வேள்வித் தீயின் முன்னால் பெண்ணைக் காணிக்கையாகக் கொடுப்பது.

மேற்கண்ட இத்திருமண முறைகள் ஆரியர்களுக்கு உரிய திருமண முறைகளாக இருந்தன. இந்த முறையிலுள்ள பெரும்பாலான வழக்கங்களைத் தமிழர்களிடையே புகுத்தினர்.

அதன் விளைவாய், பெண்ணின் விருப்பங்கேளாமல் திருமணம் செய்தல், பெண்ணுக்கு அதிக நகை போடுதல், பெண்ணைத் தானமாகக் கொடுத்தல், வரதட்சணை அளித்தல், ஒரே சாதியில் திருமணம் செய்தல், வயது முதிர்ந்தவனுக்குப் பெண் கொடுத்தல் போன்ற தவறான வழக்கங்கள் தமிழர்களிடையே வந்தன.

இதன் பயனாய் இன்று தமிழனின் திருமண முறை மிகவும் கேவலமான முறையில் ஆகிவிட்டது.

ஆரியர்கள் நடத்தி வைக்கும் திருமணம் பற்றிய பிற செய்திகள் இந்நூலின் ஆறாவது கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

திதி :

இறந்த பெற்றோர்களை நினைத்து மரியாதை செலுத்திய தமிழர்களிடையே பெற்றோர்களுக்காக திதி கொடுக்கும் முறையை ஆரியர்கள் ஏற்படுத்தினர். தங்களுக்கு வருவாய் தேடிக் கொள்ளவே ஆரியர்கள் இவ்வழக்கத்தை ஏற்படுத்தினர்.

வழிபாட்டில் சடங்குகள் :

இயற்கையை வணங்கியும், பெரியவர்களை வழிபட்டும் வந்த தமிழர்கள் மத்தியில், கடவுளைப் புகுத்திய ஆரியர்கள்,

கடவுளை வணங்க ஏற்படுத்தினர். பல்வேறு சடங்குகளை ஏற்படுத்தினர்.

அபிஷேகம், ஆராதனை, தட்சணை, கும்பாபிஷேகம், திருமஞ்சனம், உற்சவம் போன்ற ஏராளமான சடங்குகளை ஏற்படுத்தினர்.

இச்சடங்குகள் மூலம் தாங்கள் உயர்வு பெறவும், வருவாய் பெறவுமே இவற்றை ஏற்படுத்தினர்.

பலவித பண்டிகைகள் :

பொங்கல் திருநாள் மட்டும் (நன்றி விழாவாக) தமிழன் கொண்டாடினான். ஆனால், ஆரியர்கள் வருகைக்குப் பிறகு ஏராளமான - பகுத்தறிவிற்கு ஒவ்வாத பண்டிகைகள் அவர்களால் உருவாக்கப்பட்டன. தமிழனைத் தாழ்த்தி, ஆரியர்களை உயர்வுபடுத்தும் பண்டிகையைக்கூட கொண்டாடும் அளவிற்குத் தமிழர்களின் வாழ்வு தடம் புரண்டது.

தன்மானத்தோடும், பகுத்தறிவோடும் பிறருக்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்த தமிழன், ஆரியர்களின் தொடர்பினாலும், போதனையாலும் பகுத்தறிவை இழந்தான். தன்மானத்தை இழந்தான், தகுதியை இழந்தான், பொருளையும், புகழையும் இழந்தான். இன்று சாதியாலும், மதத்தாலும் பிரிந்து, கண்மூடித்தனமாய் வாழ்ந்து சீரழிந்து வருகிறான்.

5. இந்து மதம் உருவானது எப்படி?

உலகிலுள்ள பிற மதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனிதனால் உருவாக்கப்பட்டவை. அவ்வாறு உருவாக்கப்பட்ட மதங்களுக்கு, உருவாக்கியவர்களே கொள்கைகளையும் வகுத்துக் கொடுத்தனர். அதாவது, அவர்களுடைய போதனைகளே அம்மதத்தின் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கிறித்துவ மதம் ஏசுவாலும், இஸ்லாம் மதம் நபியாலும் தோற்றுவிக்கப்பட்டது.

ஆனால், இந்து மதம் இவை போல் யாராலும் தோற்றுவிக்கப்பட்டது அல்ல.

இந்து மதத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட கடவுள் இல்லை. குறிப்பிட்ட கொள்கைகள் (போதனைகள்) இல்லை.

இவற்றிற்குக் காரணம், இந்துமதம் என்பது ஒரு மதமாகத் தோற்றுவிக்கப்படாததுதான்.

இமயம் முதல் இலங்கை வரையுள்ள பகுதியில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அவ்வப்போது உருவாக்கப்பட்ட ஆத்திகக் கருத்துக்களின், கவிதைகளின் கடவுள் நம்பிக்கைகளின், கண்மூடி வழக்கங்களின் தொகுப்பே இந்து மதமாகும்.

அதாவது, இந்தியா முழுவதும் சிதறிக் கிடந்த ஆத்திக நம்பிக்கைகளும், கொள்கைகளும், இடைக்காலத்தில் தொடர்பு படுத்தப்பட்டும், தொகுக்கப்பட்டும் இந்துமதம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

உதாரணமாக வினாயகர் வழிபாடு என்பது முற்காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை. அதே போன்று முருகன் வழிபாடு என்பது வடநாட்டில் (வடஇந்தியாவில்) இல்லை.

பரஞ்சோதி என்னும் பல்லவப் படைத்தலைவன் வாதாபி நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, அந்நகரை வென்றான். மனித உடலுடன் யானைத் தலையுடனும் கூடிய உருவச் சிலைகளை அங்கு கண்டான். அதிசயித்தான். அச்சிலையை ஓர் அதிசயப் பொருளாகத் தமிழகத்துக்குக் கொண்டு வந்தான்.

அதன்பின் அச்சிலைக்கு வினாயகர் என்று பெயர் சூட்டி, தமிழகத்தில் வழிபட ஆரம்பித்தனர். "வாதாபி கணபதி..." என்று வினாயகரை வழிபடுவதே அதற்குப் போதுமான ஆதாரமாகும்.

இவ்வாறு தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வினாயகர், தமிழ்நாட்டில் வழிபடப்பட்ட முருகனுக்கு அண்ணன் என்ற உறவு உண்டாக்கப்பட்டார். அதை அடிப்படையாக வைத்து அதன்பின் ஆயிரமாயிரம் கதைகள்.

இதுபோலவே விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் உறவு உண்டாக்கப்பட்டது.

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் வாழ்ந்த மக்கள் தங்கள் தங்கள் விருப்பத்திற்கும், இயல்பிற்கும், சூழ்நிலைக்கும், பழக்க வழக்கத்திற்கும் ஏற்ப கடவுள்களை உருவாக்கி வழிபட்டனர். கடவுள் கொள்கைகளை உண்டாக்கி பின்பற்றினர்.

முரட்டுத்தனமான இயல்பும், புலால் உண்ணும் பழக்கமும் உள்ளவர்கள் அதற்கேற்ப கடவுளை உருவாக்கினர். அக்கடவுள்களுக்கு கத்தி, வேல், வாள், சூலம் முதலிய பல ஆயுதங்களை அணிவித்துப் புலால் வைத்துப் படைத்து வழிபட்டனர்.

சாந்த குணமுள்ளவர்கள், புலால் உண்ணாதவர்கள் தங்கள் கடவுள்களைத் தங்கள் இயல்பிற்கு ஏற்ப உருவாக்கி வழிபட்டனர்.

கடற்கரை மக்கள் கடலை வழிபட்டனர்.

விவசாயம் செய்வோர் சூரியனையும், மழையையும் மாட்டையும் வழிபட்டனர்.

வீரம் பொருந்திய மக்கள் வீரர்களை நடுகல் நட்டு வழிபட்டனர்.

கற்புடைய பெண்களையும் கோயில் கட்டி வழிபட்டனர்.

கண்ணகிக்கோயில், தீய்ப்பாய்ந்த அம்மன்கோயில் ஆகியவை பத்தினிப் பெண்களுக்காக உருவாக்கப்பட்டவையே ஆகும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கடவுள்கள் அனைத்துமே பிற்காலத்தில் உறவு உண்டாக்கப்பட்டு, தொடர்புபடுத்தப்பட்டு, தொகுக்கப்பட்டு இந்துமதமாக்கப்பட்டது.

இந்த உண்மையைக் கீழ்க்கண்ட ஆதாரங்களைக் கொண்டு இன்னும் உறுதி செய்யலாம்.

முரண்பட்ட கொள்கை :

இந்துமதக் கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் காணப்படுகின்றன.

சங்கரரின் அத்வைதக் கொள்கை :

"பரமாத்மா என்னும் கடவுளும், ஜீவாத்மாக்கள் என்னும் உயிர்களும் ஒன்றே. இறைவனின் அருளைப் பெற்று அவருடன் இரண்டறக் கலப்பதே முக்தி நிலை" என்கிறார் சங்கரர்.

இராமானுசரின் விசிஷ்டாத்வைதக் கொள்கை :

"ஜீவாத்மாவும், பரமாத்மாவும் வேறானவை. ஜீவாத்மாவின் முக்தி நிலை பரமாத்மாவுடன் கலப்பதன்று" என்கிறார் ராமானுசர்.

இந்த இரண்டு கொள்கைகளும் இந்துமதக் கொள்கைகளே. ஆனால் இரண்டும் ஒன்றுக்கொன்று எவ்வளவு முரண்பட்டிருக்கின்றன பார்த்தீர்களா? ஒருவர் சொல்வதை இன்னொருவர் மறுப்பதுபோல் அல்லவா உள்ளது.

இந்து மதம் தோற்றுவிக்கப்பட்ட மதமாக இருக்குமே யானால், இப்படி முரண்பட்ட கொள்கைகள் இருக்காது. பல கொள்கைகளையும் தொகுத்துப் பிற்காலத்தில் பெயர் சூட்டப்பட்டதால்தான் இந்த முரண்பாடுகள் காணப்படுகின்றன.

பல கடவுள் கொள்கை :

இந்து மதத்தில் முரண்பட்ட பல கடவுள்கள் உள்ளன. பல சைவக் கடவுளும் உண்டு. அசைவக்கடவுளும் உண்டு. சாந்தமான கடவுளும் உண்டு. முரட்டுத்தனமான கடவுளும் உண்டு. இப்படி பலவிதம் இருப்பது இந்துமதம் பின்னாளில் தொகுக்கப்பட்டது என்பதை நிரூபிக்கின்றன.

பொருத்தமில்லா வேதங்கள் :

இந்து மதத்தின் முக்கிய அங்கம் வேதங்களாகும். அந்த வேதங்கள், மதக்கொள்கைகளுக்கும், நம்பிக்கைக்கும் பொருத்தமில்லாதவைகளாக உள்ளன.

1. ரிக்வேதம் : ஆரியர்கள் தாங்கள் வணங்கிய காற்று, நீர், இடி, மழை போன்ற இயற்கை சக்திகளை போற்றிப் பாடிய பாடல்கள் அடங்கியதே ரிக்வேதம்.

2. சாமவேதம் : ரிக்வேதத்தை இசையுடன் பாட ஏற்படுத்தப்பட்டதே சாமவேதம்.

3. யசூர் வேதம் : இயற்கை சக்திகளை வணங்கிய ஆரியர்கள், சடங்குகள் செய்யும் வழக்கத்தைப் பின்னாளில் உண்டாக்கினர். சடங்குகளையும், யாகங்களையும் செய்யும் முறைகளை விளக்குவதே யசூர்வேதம்.

4. அதர்வண வேதம் : ஆரியர்களின் முற்கால வாழ்க்கையையும், பிரார்த்தனை பாடல்களையும் உள்ளடக்கியது அதர்வண வேதம் ஆகும்.

இந்து மதத்தின் வேதங்கள் எனப்படுபவை, இந்துமதக் கொள்கைகளைப் பிரதிபலிப்பதற்குப் பதிலாக ஆரியர்களுடைய கடவுள் கொள்கையைப் பற்றியும், அவர்கள் வாழ்க்கையைப் பற்றியுமே கூறுவதால், இந்துமதம் தொகுக்கப்பட்டபோது வேதங்களும் அத்தோடு தொடர்பு படுத்தப்பட்டன என்பதையே காட்டுகிறது.

அது மட்டுமின்றி இவ்வாறு பல கடவுள்களையும், பல கொள்கைகளையும் இணைத்து இந்துமதத்தை உருவாக்கியவர்கள் ஆரியர்களே என்பதையும் இது உணர்த்துகிறது.

காரணம், ஆரியர்கள் வழிபாட்டைப் பற்றியும், வாழ்வைப் பற்றியும் கூறும் வேதங்கள் இந்துமதத்தின் வேதங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்றால் இந்து மதம் அவர்களால் (ஆரியர்களால்) இடைக்காலத்தில் தொகுக்கப்பட்டதுதான் என்பது தெளிவாகிறது.

இது மட்டுமின்றி இந்துமதத்தின் சட்டங்களாகக் கூறப்பட்டுள்ளவைகளை ஆராய்ந்தால், இந்துமதம் ஆரியர்களின் நலத்திற்காக ஆரியர்களால் இடைக்காலத்தில் தொடங்கப்பட்டதுதான் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

"மௌண்ட்யம் ப்ராணந்தி கோதண்ட
ப்ராஹ்மணானாம் விதியதேணர
இதரேஷாம்து வர்ணான மதண்ட் ப்ராந்தி கோபவதே"

- மனுஸ்மிருதி

"கொலைத் தொழில் புரிந்து பிற சாதிக் காரர்களைத் தூக்கிலிட வேண்டும். ஆனால் பிராமணன் (ஆரியன்) கொலை குற்றம் செய்தால் அவனது தலைமயிரை மொட்டையடித்தல் மட்டும் போதும். அதுவே அவனுக்குரிய தண்டனை." என்று இந்து மதத்தின் ஆணிவேரான மனுஸ்மிருதி இவ்வாறு கூறுகிறது.

"அதாநருணாமதனம வருத்வாயோ ததாதீத தர்த்தீனே
ஸவை போஷண ஜாத்பாபாத் முக்தோ பவதிதத் க்ஷணம்"

- ஞாக்ஞவல்கியர்

"பிறருக்குக் கொடுக்காத கருமியின் பொருளைக் கொள்ளையிட்டுப் பிராமணனுக்குக் கொடுக்கிறவன், அக்கணமே அத்திருட்டினால் உண்டான பாவத்தினின்றும் விடுதலை அடைகிறான்" என்று இதற்குப் பொருள்.

"ச்ரரந்தஸம் வாஹனம் ரோகி பரிசர்யா சுரார்ச்சனம்
பாதசௌமத்வி ஜோச்சிஷ்ட மார்ஜனம்
கோப்ரதாவனத்"

"களைப்புற்ற பிராமணனின் உடலைத் தடவுதல், நோய்வாய்ப்பட்ட பிராமணனுக்குத் தொண்டு செய்தல், பிராமணன் வந்தவுடன் அவனது கால்களை அலம்பி விடுதல், பிராமணன் உண்ட இடத்தைச் சுத்தம் செய்தல், இவைகளைச் செய்கின்றவர்களுக்குப் பெரும் பயன் கிடைக்கும்" என்பது இதன் பொருள்.

"நாத பரதரம் தர்மோ ந்ருபாணாம் யத்ரணார்கிதம்

விப்ரேப் யோதீயதே தீரவ்யம்

- யாக்ஜவல்கியர்

"சண்டையில் பகைவர்களைக் கொன்று அவர்களின் பொருட்களைக் கைப்பற்றி, அவைகளை அரசனானவன் பிராமணர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் ஒப்பான தர்மம் வேறொன்றும் இல்லை" என்பது இதற்கு அர்த்தம்.

"நவிஷம் விஷமித்யாஹீர் பரமஹமஸ்வம்

விஷமுச்யதே:

விஷமேகாகினம் ஹிந்தி ப்ரஹ்மஸ்வம் பௌத்ரகம்"

"விஷமானது அதை உட்கொண்டவனை மட்டும் கொல்லும். அதைவிடக் கொடிய விஷம் பிராமணனுடைய பொருள். ஏனென்றால் பிராமணனுடைய பொருளை எவன் ஒருவன் கைப்பற்றுகிறானோ அவனை மட்டுமின்றி அவன் குலத்தையே அது நாசஞ் செய்துவிடும்" என்பது இதன் கருத்து.

"பிராம்மணோ நஹிம் ஸிதவ்ய"

"பிராமணன் எக்குற்றம் புரிந்தாலும் அவனது உடலை வருத்தக்கூடாது" என்பது இதற்கு அர்த்தம்.

இவ்வாறு ஆரியர்களின் உயர்விற்கும், நலத்திற்கும் வகை செய்யக்கூடிய சாஸ்திரங்களே இந்துமதத்தின் சாஸ்திரங்களாக இருப்பதால், இந்து மதத்தைத் தொகுத்தவர்கள் ஆரியர்களே என்பது மட்டுமல்லாமல், இச்சாஸ்திரங்களை எழுதியவர்களும் அவர்களே என்பதும் தெளிவாகிறது.

இன்னும் சொல்லப் போனால் இந்துமதக் கடவுள்களை உருவாக்கியவர்களும் ஆரியர்களே ஆவர். ஆரியர் இல்லாதவர்கள், குடும்பப் பெரியவர்களையும், நிலத் தலைவர்களையும், பெண்களையும், வீரர்களையும், இயற்கையில் காணப்படும் சூரியன், புயல், வெள்ளம், பாம்பு போன்றவற்றையும் பயன்படும் பொருட்களையுமே வழிபட்டனர்.

ஆனால், அவ்வழிபாட்டையே கடவுள் வழிபாடாக ஆக்குவதற்கு ஒவ்வொரு புராணங்களையும் எழுதி மேற் கண்டவைகளை - மேற்கண்டவர்களைக் கடவுள்களாக ஆக்கியவர்கள் ஆரியர்கள்.

இந்த வகையில் கடவுளாக உருவாக்கப்பட்டதில் சிவலிங்கமும் ஒன்று முன்பு கண்டோம்.

ஆரியர்களிடமும் ஆரம்ப காலத்தில் கடவுள் வழிபாடு இல்லை. அவர்களும் இயற்கையைத்தான் வழிபட்டனர். ஆனால் தங்கள் உயர்வுக்கும், பிழைப்பிற்கும் வேண்டியே பிற்காலத்தில் கடவுள்களை உருவாக்கினர்.

அதேபோல் ஆரியர்களிடம் ஆரம்ப காலத்தில் சைவ கொள்கையும் இல்லை. புலால் உண்டுதான் வாழ்ந்தனர்.

தாங்கள் வணங்கிய சூரியன், மழை, புயல், இடி, மின்னல் போன்றவற்றைத் திருப்திப்படுத்த யாகங்கள் செய்தனர். அந்த யாகத் தீயில் விலங்குகளைத் தள்ளிப் பலியிட்டனர். அவ்வாறு பலியிடப்பட்ட விலங்குகளை ஆரியர்கள் உணவாக உண்டனர்.

ஆனால், புத்தன் இவ்வாறு பலியிடுதலைக் கண்டித்தான்.

"உள்ளம், சொல், உடல் இவைகளினால் தீய காரியங்களைச் செய்யாமல், இம்மூன்றினையும் யார் ஒருவன் அடக்கி ஆள்கிறானோ அவனே உண்மையான பிராமணன்.

"மயிரை வளர்ப்பதனாலோ, பிறப்பினாலோ, கோத்திரத்தினாலோ ஒருவன் பிராமணன் ஆகமாட்டான். யாரிடத்தில் உண்மையும் அறநெறியும் இருக்கிறதோ அவரே தூய்மையானவர். அவர்தான் உண்மையான பிராமணர் ஆவார்."

"எந்தப் பிராணியையும் அடித்துத் துன்புறுத்தாமலும், கொல்லாமலும், கொல்லச் செய்யாமலும் இருக்கின்றவர் யாரோ அவரை நான் பிராமணன் என்று அழைக்கிறேன்."

என்று புத்தர் மக்களிடையே போதனை செய்தார்.

இப்போதனைகள் மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கினைப் பெற்றன. பார்ப்பனர்களின் செல்வாக்கு குறைந்தது. எனவே, மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ள புலால் உண்கின்ற வழக்கத்தைக் கைவிட்டு, ஆரியர்களும் புலால் உண்பதில்லை என்று முடிவெடுத்தனர். புலால் உண்ணக்கூடாது என்று இவர்களும் போதிக்கத் தொடங்கினர்.

இதனால் தங்கள் செல்வாக்கு மக்களிடையே அதிகம் குறையாமல் பாதுகாத்துக் கொண்டனர்.

புத்த, சமணக் கொள்கைகள் வளர ஆரம்பித்தால் தங்கள் செல்வாக்கும், தகுதியும் தாழ்ந்துவிடும் என்று எண்ணி, மக்களைக் கவர பல ஆரவார நடவடிக்கைகளை உருவாக்கினர்.

வழிபாட்டில் சடங்குகள், பல்வேறு விழாக்கள் இவற்றை ஏற்படுத்தினர். இதன் மூலம், புத்த சமண இயக்கங்களை நோக்கி மக்கள் அதிகம் செல்லாமல் தடுத்தனர்.

சடங்குகள் செய்வதிலும், விழாக்கள் கொண்டாடுவதிலும் மக்களுக்கு விருப்பம் அதிகமாகியது. இதனால் ஆரியர்கள் போதித்த கடவுள் கொள்கைகளை மக்கள் பெருமளவில் ஏற்றுக் கொண்டனர்.

இவ்வாறு சடங்குகளும், கடவுள் விழாக்களும் ஆரியர்களால் தோற்றுவிக்கப்பட்டன.

சடங்குகளும், விழாக்களும், கடவுள்களையும், புராணங் களையும் ஏன் ஆரியர் அல்லாதார் தோற்றுவித்திருக்கக் கூடாது? என்று சிலர் கேட்கக்கூடும்.

புராணங்களையும், சடங்குகளையும், விழாக்களையும் ஆராய்ந்தால், அவை ஆரியர்களுக்கு உயர்வு அளிக்கக் கூடியதாயும், வருவாய் அளிக்கக் கூடியதாயும் இருப்பதைக் காணலாம். ஆரியர் அல்லாதார் உருவாக்கியிருந்தால் ஆரியர் களுக்கு உயர்வு தரக்கூடியதாக, ஆரியர்களுக்கு வருமானம் தரக்கூடியதாக உருவாக்கியிருப்பார்களா?

கடவுள்களையும், புராணங்களையும், விழ்ாக்களையும், சடங்குகளையும் ஆரியர்கள் உருவாக்கியதற்கு என்ன காரணம்?

கடவுள் நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி, தங்களுக்குப் பாதுகாப்பு தேடிக் கொண்டனர். அதாவது, ஆரியர்கள் எண்ணிக்கையில் குறைவு. உடல் பலத்தைக் காட்டி மற்றவர் களை இவர்கள் அடக்கியாள முடியாது. எனவே, ஆரியர் அல்லாதாரைப் பக்தி வலையில் வீழ்த்தி அடிமை கொள்ள கடவுள்களை உருவாக்கினர். ஒருவனுக்குக் கடவுள் நம்பிக்கை வந்துவிட்டால், அந்த நம்பிக்கையின் அடிப்படையில் எதை யும் செய்ய தயாராக இருக்கிறான்.

கோயிலில் கழுவி விடப்படும் தண்ணீரைக் குடிக்கிறான். அலகு குத்திக் கொள்கிறான். அர்ச்சகரைக் கண்டு வணங்குகிறான். கடவுளுக்குத் தொண்டு செய்கின்றவனை உயர்ந்தவன், வழிபடத் தக்கவன் என்று எண்ணுகிறான். இன்றைக்கும் இது நடைமுறையில் உள்ள உண்மைதானே. அக்காலத்தில் மக்கள் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ!

எனவேதான் மற்றவர்களை அடக்கியாள ஆரியர்கள் கடவுள் என்ற கருவியைப் பயன்படுத்தினர்.

ஆரியர்கள் செந்நிறத் தோற்றம் உடையவர்களாக இருந்ததால், அவர்களின் தோற்றமே அவர்களுக்கு ஓர் உயர் தகுதியைக் கொடுத்தது. இந்தத் தகுதியைப் பயன்படுத்தி தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டனர்.

தேவர்களுக்கு அடுத்த தகுதி உடையவர்கள் ஆரியர்களே என்று கூறிக் கொண்டனர்.

தங்களைப் பூத்தேவர்கள் (பூமியிலுள்ள தேவர்கள்) என்று கூறிக் கொண்டனர்.

தாங்கள் பிரம்மனின் முகத்தில் பிறந்தவர்கள் என்றும், சூத்திரர்கள் பிரம்மனின் காலில் பிறந்தவர்கள் என்றும் கூறினர்.

தாங்கள்தான் இறைவனுக்குத் தொண்டு செய்ய (பூசை செய்ய) தகுதி உடையவர்கள் என்று கூறினர்.

இன்றைக்கும் பக்தி மயக்கத்தில் பார்ப்பன சங்காரச்சாரிகளின் காலில் விழுகின்றவர்களும், அவர்களின் கால்களைக் கழுவிக் குடிக்கின்றவர்களும் இருக்கின்றபோது, அன்றைய மக்கள் ஆரியர்களுக்கு அடிமையானதில் அதிசயம் என்ன இருக்க முடியும்?

எனவே, தாங்கள் உயர்வு கிடைக்கக் கடவுள்களைக் கற்பித்தனர். (உண்டாக்கினர்) கடவுள்களை நம்ப புராணங்களை உண்டாக்கினர்.

மக்கள் என்றென்றைக்கும் பக்தி வலையில் வீழ்ந்து கிடக்க விழாக்களை ஏற்படுத்தினர்.

அடிக்கடி கடவுள் விழாக்கள் கொண்டாடப்பட்டால் மக்களின் கடவுள் நம்பிக்கை குறையாமல், உறுதிப்படுத்தப் பட்டுக் கொண்டேயிருக்கும் என்பதால் கடவுள் விழாக்களை உருவாக்கினர்.

தங்களுக்கு வருவாய் வேண்டும் என்பதற்கு சடங்குகளை உருவாக்கினர்.

திருமணம், திதி, அர்ச்சனை, அபிஷேகம் போன்றவற்றை ஏற்படுத்தி அதன் மூலம் "தட்சணை" என்ற பெயரில் தங்களுக்குத் தேவையான வருவாயைப் பெற்றுக் கொண்டனர்.

எனவே, தங்களுக்கு உயர்வையும், வருவாயையும் அளிக்கக் கூடிய ஒரே வழி கடவுள் நம்பிக்கையே என்பதை உறுதியாக முடிவு செய்து கொண்ட ஆரியர்கள், அந்த நம்பிக்கை என்றென்றும் குறையாமல் இருக்கவும், மற்றவர்கள் கூறுகின்ற போதனையால் ஈர்க்கப்பட்டு மக்கள் மற்ற மதங்களுக்குச் சென்றுவிடாமல் ஒரு கட்டுப்பாட்டிற்குள் மக்களை ஒன்றுபடுத்தவும் சாஸ்திரங்களை உருவாக்கினர்.

அது மட்டுமின்றி, சாஸ்திரங்களை உருவாக்கியதன் மூலம் தங்கள் உயர்ந்த தகுதியையும் நிலைநாட்டிக் கொண்டனர்.

அதாவது, சாஸ்திரப்படி தங்களை உயர்ந்தவர்களாக உறுதி செய்து கொண்டனர்.

இப்படி பல்வேறு கடவுள்களையும், நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் புராணங்கள் என்னும் பையினுள் போட்டு,

சாஸ்திரங்கள் என்னும் கயிற்றால் கட்டி உருவாக்கப்பட்ட மூட்டையே இந்துமதம்.

இவ்வாறு, பண்டை மக்களின் நம்பிக்கைகளை, வழிபாட்டை, வணக்கத்தை அடிப்படையாக வைத்து, ஆரியர்களால் அவர்கள் நலத்திற்காக உருவாக்கப்பட்டதே இந்துமதம்.

6. ஏ, தமிழா! நீ ஓர் இந்துவா?

தமிழா! பார் போற்ற வாழ்ந்த நம் பழந்தமிழர் வாழ்வு முறை பாழ்பட்டுப் போன வரலாற்றைப் பார்த்தாயா? பக்தி மயக்கத்தில் பரம்பரை வாழ்வு முறை உனக்குத் தெரியாமல் போய்விட்டது; இந்து என்று இதுவரை எண்ணி இருந்துவிட்டாய்! இப்பொழுது சொல், நீர் ஓர் இந்துவா?

இன்னும் உனக்கு இந்து என்றுதான் சொல்லத் தோன்றுகிறதா?

ஆம் என்றால், அப்படியே சொல்!

ஆனால், நீ இந்து என்று சொல்வதற்கு என்ன பொருள்; இந்து மதத்தில் உன் நிலை என்ன என்ற சொல்லிவிடுகிறேன். அதன் பிறகும் சொல்ல விருப்பமிருந்தால் சொல், சொல்லிக் கொண்டேயிரு.

இந்துமதப்படி நீ யார்?

நீ ஒரு சூத்திரன்!

சூத்திரன் என்றால் பொருள் என்ன?

"அடிமை", "விபச்சாரியின் மகன்", "இழிமகன்" என்று பொருள்.

நீ ஓர் இந்து என்றால், இந்துமத சாஸ்திரங்களுக்கு நீ கட்டுப்பட்டவன் என்று பொருள். இந்துமத சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டவன் என்றால், இந்துமத சாஸ்திரங்கள் கூறுகிறபடி நீ நடக்க வேண்டும் என்று அர்த்தம்.

இந்து மத சாஸ்திரங்கள் என்ன கூறுகின்றன தெரியுமா?

"பிராஹ்மணோ ஜாயமானோ ஹ்றப்ருதிஸ்யாம்
அபியாஜதே ஈஸ்வர :
ஸர்வபூதானாம் ப்ரஹ்ம
கோசஸ்யகுப்தயே"

"ஸர்வஸ்வம்ப் ராஹ்மணஸ்யேதம்
யத்கிஞ் சிஜ்கதீகஜதம்:
ஸ்ரைஷ்டைனா பிஜனேனேதும் ஸர்வம்
வைப்பிராஹ்ற மணோர் ஹதி"

"ஸ்வமேவப் ராஹ்மணோ
புங்க்தேஸ்வம் ததாதிச:
ஆன்ருமிம்ஸ்யாத் பிராஹ்மண
ஸ்யபுஞ்ஸதே ஹீதரேஜனா"

- மனுஸ்மிருதி

"எல்லா உயிர்களுக்கும் தலைவனாயும், வேதமாகிய களஞ்சியத்தில் காவலனாயும் பிராமணன் படைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இப்பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பிராமணன் உரிமையுள்ளவனாவான். பிராமணன் பிச்சையெடுத்து உண்புவனாயினும், மற்றவர்கள் உண்பதும், உடுப்பதும், கொடுப்பதும் அவன் பொருளாகும். ஏனையோர் பிராமணனுடைய கருணையால் அவனாற் கொடுக்கப்பட்ட சிற்சில பொருட்களைப் பெற்றுக் கொண்டு உயிர் வாழ்கின்றார்கள்" என்று இந்து மதத்தின் ஆதாரமான சாஸ்திரம் மனுஸ்மிருதி (மனுதர்மம்) கூறுகிறது.

"தேன சோத்தரஸ்ததர்த்தோஹ்ஸ்ய நிச்ய"

- யாக்ஞவல்கியர்

"சூத்திரன் ஏதாவது பொருளீட்டினால் அது பிராமணனுக்கு உரியது" என்பது இதற்குப் பொருள்.

"ஏகமேவது சூத்திரஸ்யப்ரபு; சாமஸ மாதிசத்

எதேஷாமேவ வர்ணானாம் சுஸ்ரூஷா மனஸீயய"

- மனுஸ்மிருதி

பொறாமையின்றி பிராமணனுக்குப் பணிவிடை செய்தலே சூத்திரனது தொழில் என்று கடவுள் கட்டளை இட்டிருக்கிறார் என்பது இதற்குப் பொருள்.

"ஜாதிமாத்ரோ பஜீவீவா காமம்ஸ்யாத் ப்ராஹ்

மணப்ருவ;

தர்ம் ப்ரவத்தா தருபதோ நது சூத்ர: கதாசன"

- மனுஸ்மிருதி

கொடியவனாக இருந்தாலும் பிராமண குலத்தில் பிறந்த ஒருவனை, அரசன் மந்திரியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அறிவில் மிகுந்தவனாயினும் சூத்திரன் ஒருபோதும் அரச சபைக்கு உரியவனாக மாட்டான்.

"சூதரந்து காரயேக் தாஸ்யம்

கரீதமக்ரீ தமேவவா:

தாஸ்யாயைவ ஹீஸ்ருஷ்டோ ஸௌப்

ராஹ்ற மணஸ்ய ஸ்வறம்புவா"

கூலி கொடுத்தாலும், இல்லாமலும் சூத்திரனை வேலை வாங்கலாம். ஏனென்றால் பிராமணனுக்குப் பணிவிடை செய்யும் பொருட்டே சூத்திரன் பிரம்மனால் படைக்கப்பட்டான்.

"உச்சிஷ்ட மன்னன் தாதவ்யம்

ஜீர்ணானி வஸனானிச:

புலரகாஸ் சைவதர்ன்யானாம்

ஜீர்ணாஸ்சைவ பரிச்சதா"

- மனுஸ்மிருதி

சூத்திரனுக்கு எச்சிலும், கிழிந்து போன பழைய ஆடையும், தானியங்களில் ஒதுக்கப்படுவதையுமே கொடுக்க வேண்டும்.

"சூத்ரஸ்யது ஜுகுப்ஸிதம்"

- மனுஸ்மிருதி

கேட்பதற்கு அருவெறுப்பாகவுள்ள பெயரையே சூத்திரனுக்கு இடவேண்டும்.

தமிழா! நீ ஓர் இந்து என்றால் உன் நிலை என்ன என்பதைத் தெரிந்து கொண்டாயா?

இந்து மதப்படி பிராமணன் பிரம்மனின் முகத்தில் பிறந்தவன், சூத்திரன் பிரம்மனின் காலில் பிறந்தவன்.

ஆரியனை (பிராமணனை) உயர்ந்தவன் என்றும், அவனுக்கே அடிமையென்றும் கூறும் மதம் எப்படி உன்னுடைய மதமாக இருக்க முடியும்? அது ஆரியமதமாகத்தானே இருக்க முடியும்?

இந்துமதப்படி மணம் புரிந்தால்
உன் மனைவி ஒரு விபச்சாரி

இந்துமதப்படி தமிழன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றால், புரோகிதர் (ஆரியன்) தலைமையிலே திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

(அறிஞர் அண்ணா அவர்கள் சுயமரியாதைத் திருமணச் சட்டம் இயற்றுவதற்கு முன்புவரை பார்ப்பான் இல்லாமல் நடத்தப்படும் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாத திருமணங்களாகவே கருதப்பட்டன.)

பார்ப்பான் மந்திரஞ் சொல்லி தாலி எடுத்துக் கொடுத்து நடத்தப்பட்டால்தான் அது திருமணமாகும் என்கிறது இந்துமதம். திருமணத்தின் போது பார்ப்பான் சொல்லுகின்ற மந்திரத்தின் பொருள் என்ன தெரியுமா?

"ஸோம ப்ரதமோ விவித கந்தர்வ விவிவத உத்தர:!
த்ருதியோ அக்னிஷ்டே பதி துரியஸ்தே மநுஷ்ஜயா!!"

"ஸோமோ ததத் கந்தர்வாய
கந்தர்வோ ததத் அக்னயே!
ரயிம்ச புத்ராம் சாசாத் அக்னிர் மஹ்யம்
அதோ இமாம்:"

அதாவது, "மணப்பெண்ணை சோமன் முதலில் கணவனாக அடைந்தான். பிறகு கந்தர்வன் அடைந்தான். இவளுடைய மூன்றாவது கணவன் அக்னி, நான்காவது கணவன் மனித சாதியில் பிறந்தவன்.

சோமன் உன்னை (மணப்பெண்ணை) கந்தர்வனுக்குக் கொடுத்தான். கந்தர்வன் அக்னிக்குக் கொடுத்தான். அக்னி தேவன் இவளுக்குச் செல்வத்தையும் குழந்தையையும் கொடுத்துப் பிறகு எனக்குத் தந்தான்..." என்பதே இதன் பொருள்.

இந்துமதப்படி திருமணம் செய்து கொள்ளுகின்ற உன் மனைவி பலரால் அனுபவிக்கப்பட்ட ஒரு பரத்தை (விபச்சாரி) என்று இந்துமதம் கூறுவதைப் பார்த்தாயா?

கண்ணுக்குக் கண்ணாய் கட்டுக் காவலோடு களங்கமில்லாமல் வளர்த்து, மணமேடையில் அமர்த்தப்பட்டிருக்கும் உனது மனைவியைப் பார்த்து, பலருக்கு மனைவியாக இருந்த உன்னை நான்காவதாக நான் மணக்கிறேன் என்று கூறுவதைவிட மானக்கேடு கேவலம் இருக்க முடியுமா?

அதுவும் அக்னி பகவன் குழந்தையோடு இவளை மணமகனிடம் கொடுக்கிறானாம்! ஆக, இந்துமதப்படி திருமணம் செய்து கொள்ளுகின்றவனின் மனைவி வேறொருவனிடம் குழந்தை பெற்றுக் கொண்டே அவனுக்கு மனைவியாகிறாள் என்று பொருள்!

(இந்து மந்திரத்தையும் இதற்குரிய அர்த்தத்தையும் காஞ்சி சங்கராச்சாரியாரே தனது நூலில் (தெய்வத்தின் குரல் - பாகம்-2 பக்கம்-874 வானதி பதிப்பக வெளியீடு) குறிப்பிட்டுள்ளார். எனவே, நான் மேலே குறிப்பிட்டுள்ளது உண்மையாக இருக்குமா? என்று யாரும் சந்தேகப்படத் தேவையில்லை.)

எனவே, இந்துமதப்படி திருமணம் செய்து கொள்கிறாய் என்றால், உன் மனைவியை ஒரு விபச்சாரி என்று ஒத்துக்கொள்கிறாய் என்று பொருள்.

இப்படித்தான் உன் அப்பாவும் திருமணம் செய்து கொண்டார் என்றால், நீ ஓர் விபச்சாரியின் மகன் என்று அர்த்தம். "சூத்திரன் என்றால் வைப்பாட்டி மகன்" என்று இந்துமதம் கூறுவதற்கு அர்த்தம் இப்போது புரிகிறதா?

நீ ஓர் இந்து என்றால் உனக்குள்ள இழிவைப் பார்த்தாயா? சாஸ்திரங்கள்தானே இழிவுபடுத்துகின்றன. நடைமுறையில் நமக்கேது இழிவு என்கிறாயா? நடைமுறையிலும் நீ இழிவுபடுத்தத்தான் படுகிறாய்.

நீ ஓர் இந்து என்கிறாயே, உன்னால் நீ வணங்கும் சிதம்பரம் நடராஜர் கோயில், பழனிகோயில் போன்ற கோயில்களின் கருவறைக்குள் (மூலஸ்தானத்திற்குள்) சென்று பூசை செய்ய முடியுமா?

இந்துமதச் சட்டப்படி முடியவே முடியாது!

ஏன் தெரியுமா? நீ ஒரு சூத்திரன்; நீ ஓர் இழிமகன்; உனக்குத் தீட்டு இருக்கிறது; நீ கருவறைக்குள் சென்றால் கடவுள் தீட்டாகிவிடும் என்கிறது இந்துமதச் சட்டம்.

இதற்கு என்ன ஆதாரம் என்கிறாயா? இதோ கூறுகிறேன்.

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு சட்டம் இயற்றினார்.

"அர்ச்சனை செய்வதற்குரிய தகுதியிருந்தால் எந்த சாதிக்காரர் வேண்டுமானாலும் எந்தக் கோயிலிலும் அர்ச்சகராகலாம்" என்று சட்டம் இயற்றினார்.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் தங்கள் ஆதிக்கக் கோட்டை அழிந்துவிடும் என்று பார்ப்பனர்கள் பதறினர். உடனே இச்சட்டத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு (ரிட்) போட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் விசாரணை முடிந்த பின் கலைஞர் போட்ட சட்டம் செல்லாது என்று தீர்ப்புக் கூறினார்கள்.

தீர்ப்பில் என்ன காரணம் கூறப்பட்டது தெரியுமா?

பிராமணன் பிறந்தவனைத் தவிர மற்ற சாதிக்காரர்களுக்குத் தோஷம் (தீட்டு) உண்டு. (அதாவது பிராமணனைத் தவிர மற்ற எந்த சாதிக்காரர்களாக இருந்தாலும், பிள்ளை இருந்தாலும், ரெட்டியாராக இருந்தாலும், செட்டியாராக இருந்தாலும், முதலியாராக இருந்தாலும், படையாட்சியாக இருந்தாலும், பறையனாக இருந்தாலும் அவர்களுக்குத் தீட்டு உண்டு) அவர்கள் கோயில் கருவறைக்குள் சென்றால் கடவுளின் புனிதத் தன்மை கெட்டுவிடும் (கடவுள் தீட்டாகிவிடும்) எனவே, கடவுளைத் தீட்டடையச் செய்யக்கூடிய பிற சாதிக்காரர்கள் கோயில் அர்ச்சகராக ஆகமுடியாது. பிராமணன் மட்டுமே அர்ச்சகராக ஆக முடியும் என்று தீர்ப்பு எழுதினர்.

இந்துமதச் சட்டத்தை ஆதாரங்காட்டியே நீதிபதிகள் இவ்வாறு தீர்ப்பு எழுதினர். அதனால் கலைஞர் போட்ட சட்டம் செல்லாமல் போயிற்று. அதனால் பிற சாதிக்காரர்கள் கருவறைக்குள் செல்ல முடியாமலும் போயிற்று.

இந்து மதப்படி பார்ப்பனர் அல்லாதவர்கள் நிலையைப் பார்த்தாயா? இந்த விஞ்ஞான உலகத்திலும் பார்ப்பனர் அல்லாதவர்களுக்குத் தீட்டு உண்டு என்கிறது இந்துமதம்.

கோயில் அர்ச்சகராக மட்டுமல்ல, கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்கின்ற உரிமையும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு. பார்ப்பான் கலசத்தில் நீர் ஊற்றினால்தான் கோயிலுக்குச் சக்தி வரும் என்கிறது இந்துமதம்.

வாரியார், குன்றக்குடியார் போன்றோர் எவ்வளவுதான் பெரிய பக்தர்களாக இருந்தாலும், புலமையும், புத்தியும் உடையவர்களாக இருந்தாலும் அவர்கள் பார்ப்பனர்களாக இல்லாத காரணத்தினால் அவர்களும் கருவறைக்குள் செல்ல இயலாது; கலசத்தில் நீர் ஊற்ற இயலாது.

எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும் சூத்திரன் சூத்திரன்தான்; திறமையற்றவனாயினும் பிராமணன் பிராமணன்தான் என்று இந்துமத சாஸ்திரங்கள் கூறுவது எந்த அளவிற்கு இந்த நாட்களிலும் கடைபிடிக்கப்படுகிறது பார்த்தாயா?

கோயில் கட்ட கல் சுமப்பவன் தமிழன், மண் சுமப்பவன் தமிழன், சாந்து சுமப்பவன் தமிழன், வண்ணம் சுமப்பவன் தமிழன், ஏன், கோயிலில் உள்ள சாமி சிலையையே வடித்துத் தருபவன் தமிழன். இத்தனைக்கும் பணம் கொடுப்பதும் தமிழன்.

"கரையான் புற்றெடுக்க கருநாகம் உட்புகுந்தது போன்று" உனது கோயிலில் பார்ப்பான் உட்புகுந்து செய்கின்ற ஆதிக்கத்தைப் பார்த்தாயா?

அந்த ஆதிக்கத்திற்கு அதிகாரம் அளிப்பது எது? இந்து மதமல்லவா? ஒரே மதம் உனக்கு இழிவையும், பார்ப்பனர்க்கு அதிகாரத்தையும் அளிக்கின்ற அதிசயத்தைப் பார்த்தாயா?

நீ ஓர் இந்து என்கிறாயே! இந்துமத நூல்கள் (சாஸ்திரங்கள்) ஏதாவது தமிழில் இருக்கின்றதா? அத்தனையும் சமஸ்கிருதத்தில்தானே இருக்கின்றது. சமஸ்கிருதம் ஆரியனின் மொழி. எனவே, இந்து மதம் ஆரியருடைய மதமே என்பது விளங்கவில்லையா?

இந்துமதம் என்னுடைய மதம் என்று ஏராளமான தமிழர்கள் கூறிக் கொள்கிறார்களே, இந்து மதத்தின் தலைவனாக ஒரு தமிழன் வரமுடியுமா?

இந்துமதத் தலைவர்களாகக் கருதப்படும் சங்கராச்சாரிகளாகப் பார்ப்பனர்கள் மட்டுமே வரமுடியும்?

ஆதி சங்கராச்சாரி காலந்தொட்டு தற்பொழுது உள்ள சங்கராச்சாரிகள் வரை அத்தனைச் சங்கராச்சாரிகளும் பார்ப்பனர்கள்தான்.

பார்ப்பனர்களைத் தவிர சங்கராச்சாரியாக வேறு சாதிக்காரர்கள் வர முடியாது என்று இந்துமதம் கூறுகிறது. அப்படியிருக்க அது எப்படி தமிழனுடைய மதமாக இருக்க முடியும்,

ஏ தமிழா! இப்போது சொல், நீ ஓர் இந்துவா?

7. தமிழன் வாழ்வு தழைப்பது எப்படி?

நீ ஓர் இந்து அல்ல என்றதும் வேறு எந்த மதத்தைப் பின்பற்றலாம் என்று ஆராயத் தொடங்கிவிடாதே.

எந்த மதமும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை யல்ல. மதம் என்பது அது தோன்றிய காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, கருத்துக் கூறக் கூடியதாகும். அவை கூறும் கருத்துக்கள் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியவை அல்ல.

மனிதனின் வாழ்க்கை முறையும், வசதியும் வாய்ப்பும் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே இருக்கிறது. மனிதனுடைய சிந்தனைகளும் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகின்றன. உலக அமைப்பும், உலகத் தொடர்பும் காலத்திற்குக் காலம் மாறி வருகிறது.

மாற்றத்தில் ஏற்றங்கண்டு கொண்டிருக்கும் மனிதன் என்றோ தோன்றி ஒரு மதத்தின் கருத்துக்களை என்றென்றைக்கும் பின்பற்றி நடக்க வேண்டும் என்பது சரியான முடிவாகுமா?

சிந்தனை வளர்ச்சிக்கும், உலக வளர்ச்சிக்கும் ஏற்ற ஒருவன் தன் வாழ்விலும் உரிய சிறப்பான மாற்றங்களைச் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டு வாழ்வதே சிறப்பான முடிவாகும்.

மதம் சொல்லுகின்றது என்று இக்காலத்திலும் சிண்டு முடிந்து கொண்டு, பட்டையும், நாமமும் நீட்டிக் கொண்டு

நிற்பது சரியா? பார்ப்பான் கடல் தாண்டி செல்லக்கூடாது என்று மதம் சொல்கிறது.

மதக் கருத்துப்படி பார்ப்பான் இருக்க முடியுமா?

சூத்திரன் படிக்கக் கூடாது என்று மதம் கூறுகிறது.

மதம் சொல்கிறபடி பார்ப்பனர் அல்லாதார் படிக்காமல் இருக்க முடியுமா?

பெண்கள் முக்காடு போட்டுக் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் மதம் சொல்கிறது.

ஆண்களைப் போலவே பெண்களும் பல துறைகளிலும் பணியாற்றுகின்ற இக்காலத்திற்கு இக்கருத்து பொருந்துமா? உலகத்திலுள்ள அத்தனை பேர்களும் பாவிகள் என்கிறது கிறிஸ்துவ மதம். ஒத்துக் கொள்ள முடியுமா?

எனவே, மதம் எதுவும் வேண்டாம்.

(இந்து மதமும், கிறித்துவ மதமும் ஏற்றுக் கொள்ளத் தக்கவையல்ல என்பதற்கான விரிவான விளக்கங்கள் நான் எழுதிய அர்த்தமற்ற இந்துமதம் என்று நூலில் உள்ளன.

மேலும் விவரமாகத் தெரிந்து கொள்ள அதை அவசியம் படிப்பது நன்று) ஒரு தமிழன் எழுதிய திருக்குறள் கூறாத கருத்தை இந்த உலகில் எந்த மதமாவது கூறியுள்ளது என்று யாராவது உறுதிப்படுத்த முடியுமா?

அப்படிப்பட்ட திருக்குறளிலேகூட திருத்தம் செய்யப்பட வேண்டிய கருத்துக்கள் பல உள்ளன என்கின்றபோது மதக் கருத்துக்களை நீ ஏன் தேடி அலைய வேண்டும்?

உலகையும், உலக மக்களையும் ஆராய்ந்தால் செம்மை யாக வாழ சிறந்த வழிகள் உனக்கே தோன்றுமே! சிந்திப்பதை விட்டுவிட்டுச் சிந்தனைகளை இரவல் வாங்கவா அலைவது?

பலர் கூறுவதையும் கேள்; பலவற்றையும் பார். உனக்கு உரிய வழிகளை நீயே ஆராய்ந்து தேர்ந்தெடு. உயரிய வழியில் நட. அது உன்னையும் உயர்த்தும்; உலகத்தையும் உயர்த்தும்.

எந்த ஒருவன் கருத்தையும், அப்படியே ஏற்றுக் கொள்ளாதே! வாழ வேண்டிய முறையென்பது ஒருவனின் சூழ்நிலையைப் பொருத்து அமைவது. உன்னுடைய வாழ்வை நடத்த உகந்த வழி அனைத்தையும் வேறு ஒருவன் கூறிவிட முடியாது. சில பொதுவான கருத்துக்களை வேண்டுமானால் ஒருவன் கூற முடியும்.

எனவே, பலர் கூறுவதையும் பகுத்தாராய்ந்து பார். பல நிகழ்ச்சிகளையும் கூர்ந்து கவனி. உனது பட்டறிவை உடன் சேர்த்துக் கொள். உன் வாழ்விற்கு வேண்டிய கருத்துக்களை நீயே உருவாக்கிக் கொள்.

ஆனால் ஒன்று, உன் நன்மையை மட்டும் பார்க்காதே; உலக நன்மையையும் பார். உனக்காக மட்டும் வாழாதே; உலக மக்களுக்காகவும் வாழ். உன்னை உயர்த்திக் கொள். ஆனால், பிறரைத் தாழ்த்தி அந்த உயர்வைப் பெறாதே! பிறர் தாழ்வுக்கு எவ்வகையிலும் காரணமாய் இராதே. பிறர் உயர்வுக்குக் காரணமாய் இரு.

உன்னைப் போலவே பிறரையும் நினை. அப்படி நினைத்தால், உலகத்தில் எந்த ஏற்றத்தாழ்வும் இருக்கக்கூடாது என்று உணர்வு உனக்கு வரும். உண்மையிலே ஒருவன் மனிதனாக இருக்க வேண்டும் என்றால் இவ்வுணர்வு கட்டாயம் இருக்க வேண்டும்.

உணர்வு இருந்தால் மட்டும் போதாது; உரிய செயல்களை யும் செய்ய வேண்டும். மனிதர்களிடையே இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வை ஒழிக்கப் பாடுபடு. முதலில் உன் உள்ளத்தி லிருந்து அந்த ஏற்றத் தாழ்வு உணர்வை அகற்றிக் கொள்.

ஆண்டான் அடிமை நிலையை அகற்ற ஆவன செய். உழைப்பவன் வீழ்கிறான்; உட்கார்ந்திருப்பவன் வாழ்கிறான் என்ற கொடுமையை அகற்று. நடைபாதையிலும் வாழ்க்கை, நாலடுக்கு மாளிகையிலும் வாழ்க்கை என்ற நிலையை மாற்று.

அது அவனவன் விதி என்று மதங்கள் கூறும். அது மடையனின் கருத்து என்று உதறிவிட்டு, உலகமக்கள் சம உரிமையும், சமநிலையும் பெற உணர்வு கொள். உன் மொழியை வளப்படுத்து. தமிழ் வாழ்ந்தால் தமிழன் வாழ்வான். தமிழ் அழிந்தால் தமிழன் அழிவான். ஒருவன் ஒருத்தி என்ற உணர்வில் வாழ்.

ஆணோ பெண்ணோ மறுமணம் செய்துகொள்வது விதிவிலக்காக இருக்கலாம் - அவசியம் கருதி. ஆனால் அதுவே விதியாக இருக்கக்கூடாது. உலகத்தைத் திருத்த முடியாவிட்டாலும் உன் இனத்தையாவது திருத்து. உலகுக்கு உதவ முடியாவிட்டாலும் உன் இனத்துக்காகவாவது உதவு. உலகை ஒற்றுமைப்படுத்த முடியாவிட்டாலும் உன் இனத்தை யாவது ஒற்றுமைப்படுத்து.

உலக மக்கள் அனைவரின் உரிமைக்கும் குரல் கொடு. அது பெரிய காரியமாக உனக்குப்பட்டால், உன் உடன்பிறப்பு (தமிழன்) உலகின் பல நாடுகளிலும் வாழ்கிறானே அவன் உரிமைக்காவது குரல் கொடு. குரலுக்குப் பலன் இல்லை யென்றால் கூட்டமாய் கொதித்தெழு! யார் யார் மீது ஆதிக்கம் செலுத்தினாலும் அந்த ஆதிக்கத்தை அழி! தமிழன் வாழ்வு தழைத்திட மட்டுமல்ல; தரணியிலுள்ள அனைவரின் வாழ்வும் தழைத்திட இவை போன்றவையே வழி!